புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

ௐ

இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

விரோதி௵ (1889ஆ வைகாசி௴ உதயமானது)

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—௪௮ } யாழ்ப்பாணம்:— தாது௵ ஆனி௴ ௫௳ (1936 ஜூன் 18) வியாழக்கிழமை { இலக்கம்—௨0

கல்வி என்றால் பரீக்ஷையில் தேறுவதல்ல

மூளை படுகொலை யாக்கப்படும் மோசமான நிலை

திணிக்கும் கல்வியால் விளையும் தீமைகள்

மாணவனாயிருக்கையில் மந்தனாய் இருந்த ஒருவன் பிற்காலத்தில் மகா அறிவாளியாயும், சிறுபிராயத்தில் அறிவுப் பிரகாசம் பொருந்திய மற்றொருவன் பிற்காலத்தில் நடுத்தரமான வாழ்க்கைக்கு மேல் உயர்ந்து செல்ல முடியாதவனாயும் இருப்பதைப்பற்றி அநேக கல்வி நிபுணர்கள் பலவாறு கூறுகின்றனர். மனிதனின் அறிவு விருத்திக்கும் அது மழுங்குவதற்கும் காரணம் என்னவென்று வைத்திய நிபுணர்களே கூறவல்லவர்கள்.

கல்லூரி ஆசிரியரின் நிலைமை உண்மையில் மிகவும் கஷ்டமானதாகும். பரீக்ஷையில் எத்தனைபேர் தேறுகிறார்கள் என்பதுதான் அவரது நோக்கம். சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மந்தபுத்தி யுடையவர்களாய் இருந்தால் அது உபாத்தியாயருடைய குற்றமென்று அவர்மீது பழியைப் போடுகிறார்கள். இந்தப் பழிச்சொல்லைப் பொறுக்க முடியாத ஆசிரியர்கள் சுருங்கிய காலத்தில் மாணவனுக்கு மென்மேலும் கல்வியைப் புகுத்திவிட முனைகிறார்கள். அவர் அவனைச் சாறாகப் பிழிந்து புஸ்தகங்களையும் நோட்டுகளையும் பாடங்களையும் திணிதிணியென்று திணித்துவிடுகிறார்கள். மாணவன் எல்லாப் புத்தகங்களையும் பாராயணம்பண்ணி இரவைப் பகலாக்கி, பகலை இரவாக்கி நெட்டுருச் செய்து பரீக்ஷையில் எவ்வாறோ எழுதி நிறைய மார்க்ஸ் எடுத்துப் பாஸ் பண்ணிவிடுகிறான். அப்போதுதான் பெற்றோரின் மனம் தண்ணீரைப்போல் குளிர்கிறது. அவர்கள் சபாஷ் என்று பையனைத் தட்டிக் கொடுக்கிறார்கள். அதே மாணவன் பிற்காலத்தில் வாழ்க்கையில் சம்பூரணமான தோல்வியடைகிறான்.

மாணவர்களை மந்தர்கள் சோம்பேறிகள், கிரகிக்கும் சக்தியுடன் முட்டுக்கட்டைபோடும் தன்மையுள்ளவர்கள், கிரகிக்கும் சக்தியும் ஒத்துழைப்பும் உள்ளவர்கள், மேதாவிகள் என ஐந்து வகையாகப் பிரிக்கலாம். மந்தர்களும் சோம்பேறிகளும் பாடங்களை நெட்டுருச் செய்தாலொழிய முன்னுக்கு வர மாட்டார்கள். நெட்டுருவால் இவ்விரண்டு இனத்தாரிடமே நிரந்தரமான பலனை நாம் எதிர் பார்க்கலாம்.

பாடங்களைக் கிரகிப்பதுடன் ஆசிரியரோடு ஒத்துழைக்கும் மாணவர்களையே ஆசிரியர்கள் பெருமை கொண்டாடுவார்கள். அவர்களுக்குப் பாடம் கற்பிப்பதில் யாதொரு சிரமமும் இல்லை. ஆனால் உண்மையில் கிரகிக்கும் தன்மை வாய்ந்த மாணவர்கள் தங்களின் முட்டுக் கட்டை முறைகளால் உபாத்தியாயருக்குத் தீராத் தொந்தரவையும் கவலையையுமே கொடுக்கிறார்கள்.

பையன் மூளையுள்ளவன் தான். ஆனால் அவன் தன்னுடைய மூளையை உபயோகிக்க மறுக்கிறான் அவனுக்குப் படிப்பில் சிரத்தையில்லை என்று இந்த மாணவர்களைப் பற்றி உபாத்தியாயர்கள் கூறுவதை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். இப்படிப்பட்ட மாணவர்கள்தாம் பிற்காலத்தில் பெரும் புகழ் வாய்ந்த தலைவர்களாயும் உயர்தர பதவிக்கு அருகதை உள்ளவர்களாயும் திகழ்கிறார்கள்.

மூளையை அபிவிருத்தி செய்யும் கோளங்கள் பிறக்கும் போதே அமைந்திருக்கின்றன. ஆனால் அவைகள் ஒரே காலத்தில் வேலை செய்ய ஆரம்பிப்பதில்லை. கோளங்களின் வேலை, உள் நாக்குக் கோளாறுகள், நரம்புக் கோளாறுகள், ஆகாரக் குறைவுகள், மலச்சிக்கல் முதலிய கோளாறுகளாலும் தடைப்படுகின்றன. மிக்க செல்வந்தர்களின் வீட்டுப் பிள்ளைகளும் ஆகார விஷயத்தில் அவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை. மேற்கூறிய சிறு கோளாறுகளால் இரத்தத்தில் விஷம் கலந்து விடுவதையும் அவர்கள் கவனிப்பதில்லை.

இளம் பிராயத்தில் புத்திக் கூர்மை வாய்ந்த சிறுவர்கள் வளர்ச்சி குன்றியும், மெலிவாயும் விளையாட்டுக்களில் வெறுப்புள்ளவர்களாயும் இருப்பதை நாம் காண்கிறோம். இதற்குக் காரணம் அவர்களுக்கு மூளையின் வேலை அதிகம் என்பதே.

ஒரு மின்சார அக்யூமிலேட்டரை எடுத்துக் கொள்வோம். அதன் பருமனுக்குத் தக்கபடிதான் அதில் நாம் மின்சார சக்தியைச் சேகரித்து வைக்கலாம். அளவுக்கு மேல் அதில் மின்சார சக்தியைப் புகுத்தினால் அது கெட்டுப் போகும். அது

[தொடர்ச்சி 2-ம் பக்கம்]

இத்தேசாதிபதி அடுத்த வருடம் போய்விடுவாராம்

இப்பொழுது இலங்கைத் தேசாதிபதியாகவிருக்கும் ஸேர் எட்வேட் ஸ்ரப்ஸ், அடுத்தவருடம் இராசசக்கரவர்த்தியின் கிரீடதாரணக்கொண்டாட்டம் நிறைவேறியபின் தமது உத்தியோகத்தினின்றும் விலகி இளைப்பாறுவாராம். இவருக்கு இப்பொழுது வயசு 60 கடக்கிறது. சென்ற 1933-ம் ஆண்டு டிசெம்பர் மாசம் 23-ந் திகதி இவர் இலங்கைத் தேசாதிபதியாக இங்கே வந்தவர்

வாழ்வுத் தத்துவம்

1. மலரினிலே மதுவுண்ணும் வண்டைப்போலே,
மண்ணுலகில் வாழ்வின்ப முண்ண வேண்டும்!
உலகோரை வருத்தாமல், யாசிக்காமல்,
உடையுணவுத் தேவைகளுக் குழைக்கவேண்டும்!
மலர்மணக்க, மங்கலச்சிற் றில்லெழுப்பி
வள்ளுவர்போல் மனமகிழ்ந்து வாழவேண்டும்!
கலகமிலாக் கட்டில்லாக் கவலையில்லாக்
களிப்புடைய மனத்துடனே கலக்கவேண்டும்!

2. பசித்துச் சுசிருசியாய் உண்ணவேண்டும்!
பருகுநீர் சுத்தமா யிருக்கவேண்டும்!
வசிக்குமிடம் காற்றோட்ட மாகவேண்டும்!
வலிமையுற வுடற்பயிற்சி பயிலவேண்டும்.
புசித்ததனைச் சீரணித்துப் புறத்துமிழ்ந்து,
புனிதமுறக் குடல்கழுவின் பிணிகள் வாரா;
விசித்திரமாம் ஐம்பூதக் கூடுதன்னில்
விளையாடும் ஓபைங்கிளியே சொல்லக்கேளாய்!

3. கடலை, கனி, காய், தானி யங்களுண்டு
கடவுளுக்கே நிவேதனமாய் வாழவேண்டும்!
உடலையொரு கோயிலென மதிக்கவேண்டும்!
உய்யவொரு பொதுப்பணியை முயலவேண்டும்!
படபடத்துத் திரியாமல் நிதானமாகப்
பயனறிந்து, செய்தவன செய்யவேண்டும்!
இடம்பமுடன் ஏழ்மையும் வெறுக்கவேண்டும்!
இருமைகளிற் பற்றிலா திருக்கவேண்டும்!

4. யார்வாழ்வும் சதமில்லை; யகிலந்தன்னில்
ஆவியுடன் உள்ளவரை யன்புகொண்டு,
ஊர்வாழ, உயிர்வாழ, வுண்மையான
உன்னுன்ம சுகம் வாழ வாழ்க நன்கு;
பேர்புகழுக் கில்லை, வெறும் பேச்சிற்கில்லை;
பிறந்தவினை தீர்ந்து கடன் முடிக்கவேண்டும்!
நேர்மையுற முடித்தோர்கள் விடுபட்டுய்வர்;
நெளித்திடுவோர் தலைவிதியும் சுளித்துப்போகும்!

5. பாரால யந்தனிலுன் இயல்பிற்கேற்ற
பணிசெய்யத் தவம்செய்த பலனும்; என்றும்,
ஓரான்மா வென்றுன்னை நினைத்தாலஃதே
உயர்வான சகசநிட்டை யோகமாகும்.
தாராள மாயன்பு செய்துன்னாலே
சக்தியுள துணைபுரிந்து, பக்திசெய்க!
ஏராளமாய்க் கற்ற பயனும்; இந்த
இயலுண்மை வழிநிற்றல் இன்பமாமே!

—(சுவாமி சுத்தானந்த பாரதியார்.)

தொல்காப்பியமும் சைவ மதமும்

உயர்திரு சுவாமி விபுலாநந்தா அவர்கள் விரிவுரை

தண்டமிழ் முனிவனைத் தமிழர்கள் கொண்டாடும் முறை

உயர்திரு சுவாமி விபுலாநந்தர் 1936௵ எப்ரல்௴ 28௳ தென்னிந்திய சைவசித்தாந்த சமாஜச் சார்பில், சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 'குகானந்த நிலைய'த்தில், ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். சமாஜ உதவிக் காரியதரிசி திரு G. கலியாணம், B.A., D Econ. அவர்கள் எழுதிய அதன் சுருக்கம் வருமாறு:—

'தொல்காப்பியமும் சைவமும்' என்னும் பொருள்பற்றிப் பேசப்புகுமுன் தண்டமிழ் முனிவரான அகத்தியனாரைப்பற்றிச் சில பகரலாம் என்று எண்ணுகிறேன். அகத்தியனார் கயிலையினின்றும் சிவபெருமானால் தென்னாட்டிற்கனுப்பப்பட்டாரென்றும், அவர் வரும் வழியில் வானுறவோங்கி வளர்ந்து நின்ற மாமலையை அழுத்தினாரென்றும், தமிழகத்தில் பொதியமலையில் வதிந்தனரென்றும், சங்க மரீஇத் தமிழாய்ந்தனரென்றும், அவர் முதன் மாணாக்கரான தொல்காப்பியனாரைத் தம் தேவியை அழைத்துவர ஏவினாரென்றும், இன்னபிற பல வரலாறுகள் நம் நாட்டிடை வழங்குகின்றன. அவைகளை நாம் புராணம், கதை என்று ஒதுக்கிவிடுதல் கூடாது; நடுநிலை நின்று ஆய்ந்து உண்மைகாண முயலவேண்டும். அகத்தியனாரைக் கிழக்கிந்தியத் தீவுகளில் வதியும் மக்கள், கோயிலில்வைத்துத் தெய்வமாக வழிபடுகின்றனர். நாம் அவரை ஒரு சித்தராகக் கொள்கிறோம். அவர் பேரால் இப்பொழுது அநேக தமிழ் நூல்கள் வழங்கி வருகின்றன. உள்ளத்துக்கு ஞான நூலையும் பேச்சுக்கு இலக்கண நூலையும், உடலுக்கு வைத்திய நூலையும் அவர் அருளினார் என்று கூறப்படுகின்றது. பண்டு தொட்டே இவருக்கும் சைவசமயத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதைத் தமிழ்நூல்கள் வாயிலாக நாம் அறிகிறோம். "அகத்தியர் தேவாரத்திரட்டு" என்று ஒரு நூல் இருப்பது இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இம்முனிவரின் முதன்மாணாக்கரே ஒல்காப்புகழ் பெறு தொல்காப்பியத்தை இயற்றியவர். இந்நூல் தமிழ் மொழிக்கு ஒரு கட்டளைக்கல். இது ஒரு சீரிய இலக்கண நூல். மற்ற மொழிகளின் இலக்கண நூல்களைப்போல மொழிக்கு மாத்திரம் இது இலக்கணங்கூறவில்லை; மக்களுக்கும் இலக்கணம் கூறும் தனிப் பெருஞ்சிறப்பு வாய்ந்தது இது. நாம் எதற்காக இலக்கண நூலை ஆராயவேண்டும்? மக்களுக்கும், விலங்குகளுக்கும் மொழிதான் வேறுபாடு. மொழியினால்தான் பொருளின் உண்மையை அறிகிறோம். மொழிக்கு இலக்கண நூல் இன்றியமையாதது. தொல்காப்பியத்தினின்றும் பழந் தமிழர்களின் பழக்க ஒழுக்கங்களையும், அவர் வணங்கிய தெய்வங்களையும் பற்றி அறிகிறோம் கீழ்க்கண்ட சூத்திரத்தில் திருமால், முருகன், வருணன், இந்திரன் முதலிய தெய்வங்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

"மாயோன் மேய காடுறை யுலகமுஞ்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதநெய் தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

கொற்றவை முதலிய தெய்வங்களைப் பரவியதும், வெறியாடல் முதலிய வழக்கங்களும் களவியலில் கூறப்பட்டிருக்கின்றன. சைவத்தின் காளாமுகம், பாசுபதம், காபாலிகம், வைரவம் முதலியன வழங்கின. நேபாளத்தில் இப்பொழுதும் காபாலிக சமயம் வழங்கி வருகின்றது.

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

ஜீவப்பரசாகரன்

இயற்றியவர்

மாசிலாமணி—சிவதாசன்

திருக்கோணமலை

அத்தியாயம் 2

அடுத்த நாள் புதன்கிழமையன்று காலை, சுமார் 8 மணியளவில் கலாசாலை ஆரம்பித்தது. மாணவர்கள் எல்லோரும் தத்தம் பாடங்களைக் கற்றுக்கொண்டிருந்தனர். ஆனால் சாகரனும், பரமும், ஆழ்ந்த யோசனை செய்தனர். ஏனெனில், மணியும் 8–30 ஆயிற்று; ஜீவமோ கலாசாலைக்கு வரவில்லை.

மணி 9 ஆனதும் கலாசாலை வாயிலின் முன் ஓர் மோட்டார் ரதம் நிறுத்தப்பட்டது. அப்போது சாகரனும், பரமும் ஓடிவந்து பார்க்கையில் ஜீவத்தைக் கண்டனர். அவனைக் கண்டதும், அவர்களுக்குண்டான சந்தோஷத்துக்கோ எல்லையில்லை. மணி 12 ஆனதும் பள்ளிக்கூடவேலை முடிந்து விட்டது. மாணவர்களும் தத்தம் இல்லமடைந்தனர். ஆனால் சாகரனும், பரமு கலாசாலையினின்று தம் நண்பனுடன் பின்வருமாறு சம்பாஷித்தனர்.

பரம்: ஜீவம்! இன்று கலாசாலைக்கு வரச்சுணங்கியதன் காரணமென்ன?

ஜீவம்: ஒன்றுமில்லைப் பரம்; இன்று வெள்ளிக்கிழமையாதலால், யான் ஸ்நானஞ் செய்து ஆலயத்திற்குச் சென்றிருந்தேன். ஆனதாற்றான் இங்கு வரச் சுணங்கிற்று.

பரம்: நண்பா! அது மிகவும் நன்று. "ஆலயத்தொழுவது சாலவு நன்று" என்று நம் ஒளவையும் கூறியுள்ளாள்.

சாகரன்: மித்திரர்களே! ஆலயஞ்சென்றுதானா கடவுளை வணங்கவேண்டும்? ஆலயஞ் செல்வது வேலைமினக்கேடல்லவா?

ஜீவம்: என்னே! விந்தை! உமது மந்த புத்தி இருந்தவாறென்னே! "ஆலயஞ் சென்று தானா கடவுளை வணங்கவேண்டும்?" மென்பதை விட்டு மாணவர்கள் அறிந்திருத்தல் மிகவும் அவசியமன்றோ!

பரம்: அதைப்பற்றிச் சம்பாஷிப்பதற்கு இப்போது நேரமின்மையால், அதோ! கலாசாலைக்கு முன் இருக்கும் கடற்கரைக்குச் சென்று, அங்கு இதைப்பற்றிச் சம்பாஷிப்போம்.

சாகரன்: அது ஒரு நல்லயுக்திதான் அப்படியே செய்வோம்.

ஜீவம்: உங்களிருவருக்கும் சம்மதம் எங்ஙனமோ அங்ஙனமே எனக்கும்.

பரம்: நாங்களதற்குச் சம்மதந்தான் நண்பா!

இவ்வண்ணம் இவர்கள் மூவரும் சம்பாஷித்து முடியவே மணியும் 12-30 ஆயிற்று. சூரிய வெப்பமோ அதிகமாயிருந்தது. கலாசாலைக்கருகாமையிலுள்ள தோட்டங்களில் தொழிலாளர் வெயர்வை சிந்திய வண்ணமே முயற்சி செய்துகொண்டிருந்தனர் அப்போது ஓர் மோட்டார் ரதம் கலாசாலை வாயிலின் முன் வந்ததும் ஜீவம் அதில் ஏறினன். அவ்விரு துஷ்டர்களும் அவன் பின் தொடர்ந்து, "ஜீவம்! நாங்கள் இப்போது கூறியவைகளை மறந்து விடாதே" என்று கூறிவிட்டுத் தங்களில்லம் நோக்கிச் சென்றனர்.

பரம்: சாகரா! நாமெடுத்த காரியங் கைகூடிவிட்டது கண்டனையா!

சாகரன்: நண்பனே! உமக்கு மந்திரந் தெரியும்போல தோற்றுகின்றது. ஜீவத்தை உமது சொற்கள் எவ்விதம் மயக்கிவிட்டன.

பரம்: நீர் கூறியது மிகவும் விந்தையே! மந்திரமல்ல இஃதோர் தந்திரம்.

சாகரன்: ஜீவம், என்னை மந்தையெனவும் வைது விட்டான். [illegible]னது புத்தியின்மந்தையை அவனுக்குத் தெரிவிக்கத்தான் வேண்டும்.

இங்ஙனமிவர்களிருவரும், சம்பாஷித்துக் கொண்டு செல்லுகையில், பரத்தினில்லங் கிட்டிற்று. அவன் சாகரனுக்கு வந்தனமளித்துத் தன்னில்லஞ் சேர்ந்தான். சாகரனும் சற்றுத்தூரஞ்சென்றபின் தன் வீட்டை யடைந்தான்.

அத்தியாயம் 3

ஒன்றரை மணியானதும், ஸ்ரீமான் பூபாலபிள்ளை உபாத்தியாயரவர்கள் தம் வண்டியினின்றிறங்கி கலாசாலையுட் புகுந்தார். மாணவர்களின் கூக்குரல்கள் யாவும், பரிதியைக்கண்ட பனிபோல், அடங்கின. முன்போலவே கலாசாலை ஆரம்பித்தது, பிள்ளைகள் தத்தம் பாடங்களைக் கிரமமாய் ஆசிரியரிடம் ஒப்புவித்தனர். மணியும் நான்காயிற்று. மாணவர்களும் தத்தம் வீட்டை யடைந்தார்கள்.

பரம்: ஜீவம்! இன்று, நாம் மூவரும் ஓரிடத்திற் சென்று ஆலயத்தை யொத்த விஷயமொன்று முன் கூறியிருந்தோமல்லவா? அதைப்பற்றிச் சம்பாஷிப்போம்.

ஜீவம்: அப்படியே செய்வேம்.

சாகரன்: விரைவில் நாம் வீடு சென்று வருவோமே.

ஜீவம்: ஆம், ஆம்.

பரமும் சாகரனும்:— மாலை வந்தனம்.

ஜீவம்: மாலை வந்தனம்.

நண்பர்கள் மூவரும், ஒருவர் கீழ்த்திசையையும், மற்றொருவர் மேற்குத் திசையையும், எஞ்சியவர் வடக்கையும், நோக்கினர். ஜீவமோ, தன் நண்பர்களைப் பார்க்கிலும் தமிழ் நூல்கள் பல கற்றவன். பரமும் சாகரனும் முன் கூறிய விஷயத்தைப் பற்றிச் சம்பாஷிப்பதில் ஜீவத்தை வெல்லவேண்டும் என்னுமெண்ணங்கொண்டனர். பரம், சாகரனை நோக்கி, "நண்ப! ஜீவம் தமிழில் தேறியவன். இன்றைக்கு நடக்கப்போகின்ற சம்பாஷணையில் அவன் பல மேற்கோள்களை எடுத்துக்காட்டித் தான் கூறுவனவற்றை நிறுவுவான் ஆனதால், நாமிருவரும் தமிழில் வல்லோரும், வயதில் முதிர்ந்தோரும், அறிவிற் சிறந்தோருமாய ஒருவரிடத்தில், இவ்விஷயத்தை நன்காராய்ந்து சம்பாஷிப்பது உத்தமம்" எனப் பகர்ந்தான்.

இவற்றைக் கேட்ட சாகரன் பரத்தை நோக்கி, "நண்பா அப்படியாயின் என்னுடைய பாட்டியினிடம் பேசிக்கேட்போம்; வா

பரம்: உன்னுடைய பாட்டி தமிழ் நூல்கள் கற்றவளா?

சாகரன்: தமிழ் நூல்கள் கற்காவிட்டாலும், அவள் உலக நடையில் வல்லவள். பல அறிஞர்கள் பிரசங்கஞ் செய்யும்போது கேட்டிருக்கின்றாள்.

பரம்: அப்படியாயின் அவளிடத்தில் செல்வோம்; வா.

நண்பர்களிருவரும் பாட்டியின் வீட்டை நோக்கிச் சென்றனர். சாகரன் தன் வீட்டையடைந்ததும், தன பாட்டியினண்டை போய், "பாட்டி! பாட்டி!!" என்று, அவள் உறங்கியிருப்பதையும் பாராது எழுப்பினன். பாட்டியோ கோபங்கொண்டு, "ஏனடா எழுப்பினாய்? உங்கே யார் வந்திருக்கிறது? போறு, கொப்பன் வேலையால் வாட்டும், உனக்குச் சரியான பூசை வேண்டித்தாறேன்" எனச் சினந்து பேசினள். இவற்றைக்கேட்ட பரம் சாகரனைப் பார்த்து "இஃதென்ன கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டாற் போலிருக்கின்றதே" என்றான். இதனைக்கேட்ட

(தொடர்ச்சி 6 ம் பக்கம்)

தொல்காப்பியமும் சைவ மதமும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவர் என்று தொல்காப்பியத்தில் சொல்லப்படுகிறது. அவர்கள் பிறப்பிலி, இறப்பிலி என்ற தனிப் பெருந்தெய்வத்தை வணங்கினார்கள் ஆண்டவனைப் பிறவா யாக்கைப் பெரியோனைக் கொண்டார்கள். சிவபெருமானையே பிறவா யாக்கைப் பெரியோனாகச் சிலப்பதிகாரத்தில் உரைக்கப்பட்டிருக்கிறது. இறைவனைப் பழந்தமிழ்மக்கள் மழுப்படை யேந்திய அகோரரூபமுடையவனாகக் கண்டார்கள். சாந்தகுணம் மாத்திரமில்லை; கோரகுணத்துடனும் இருந்தான் நக்கீரர் இதைப்பற்றிக் கூறியிருக்கிறார். இறைவனுக்குக் கூற்று என்ற பெயரும் உண்டு. தெய்வங்களை வழிபடுமுறைகள் காலத்துக்குக் காலம் வேறுபட்டன.

சமயவாழ்க்கைக்குச் சமூகவாழ்க்கை இன்றியமையாதது. கீழ்க்கண்ட தொல்காப்பியச்சூத்திரத்துள் சமூக வாழ்க்கையைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது.

(வரும்)

கல்வி என்றால் பரீக்ஷையில் தேறுவதல்ல

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போலவே மூளைக்கும் எவ்வளவு வேலை கொடுக்கலாகுமோ அவ்வளவு தான் கொடுக்கலாம்.

கல்லூரி உபாத்திமார்கள் இந்த மூளையின் சக்தியளவு தெரியாமல் மென்மேலும் உயர்தரக் கல்வியை மாணவனுக்கு ஊட்டவே முயற்சிக்கின்றனர். அதுவும் எவ்வளவு சுருங்கிய காலத்தில் அவர்கள் ஊட்டுகிறார்களோ அதற்குத் தகுந்தபடி அவர்களுக்குப் பெருமை கிடைக்கிறது.

தற்காலத்தில் மாணவர்களுக்குக் கல்வி புகுத்தப் படுகிறது என்றே சொல்ல வேண்டும். இதில் போட்டிப் பரீக்ஷைகள் வேறு நடைபெறுகின்றன. இந்தச் சோதனைகளிலெல்லாம் தட்டுத் தடுமாறி எப்படியாவது பாஸ் பண்ணுகிற மாணவர்கள் ஏதாவது ஒரு உத்தியோகம் கிடைத்தால் அதைச் சரிவர நிர்வகிக்கத் தகுந்த அறிவாற்றலோ உடலாற்றலோ இன்றித் திண்டாடுகிறார்கள். அவர்களுடைய சம்பாதிக்கும் திறமையும் வாழ்க்கை உயர்வும் மட்டுப் படுகின்றன. இதற்குக் காரணம் என்ன? பல வருஷங்களாகப் பகலென்றும் இரவென்றும் வித்தியாசமின்றி உடம்பு வளர்ச்சியை ஒரு சிறிதும் கவனியாமலும் தேகாப்பியாசம் செய்யாமலும் ஆகாரங்களில் சிரத்தையில்லாமலும் உடற் கோளாறுகளை அற்ப நோய்களென்று அலக்ஷியஞ் செய்தும் மூளைக்குச் சிறிதும் ஓய்வு கொடாமல் புத்தகங்களை நெஞ்சில் குத்தியாவது உருவேறப் பரீக்ஷைபாஸாக வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் உழைப்பதேயன்றி வேறொன்றுமில்லை. இந்த உருப்போடும் வழக்கத்தால் மூளை கொலை செய்யப் பட்டு விடுகிறது. கொலையுண்டபிறகு மூளைக்கு உயிர் எங்கிருந்து வரும்? ஆகவே இவ்வாறு கஷ்டப்பட்டுப் படித்து மாணவர்கள் பெறும் பட்டங்கள் வெறும் பட்டங்களாய் முடிகின்றன.

இந்த மோசமான நிலைமையைப் பற்றி அறிவாளிகள் ஆராய்ச்சி செய்தல் வேண்டும். கல்வி யென்றால் பரீக்ஷையில் தேறுவதல்ல, சிறுவர்களின் பிற்காலத்துக்கு உபயோகமாக அவர்களுக்கு அறிவையும் உடம்பையும் விருத்தி செய்வதே கல்வியின் நோக்கமாக இருத்தல் வேண்டும். மந்தர்கள் என்று மாணவர்களைப் புறக்கணித்தல் கூடாது. அவர்களையே ஆசிரியர்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும்.

பாலர் பகுதி

ஒருவிளையாட்டுக் கருவி

அருமை மருமக்காள்!

ஒவ்வொரு முறையும் கதை கேட்பதற்கு உங்களுக்கு விருப்பமிராது. எனக்கும் அது விருப்பமில்லை. ஆதலால் இம்முறை பரஷூட் என்னும் விளையாட்டுக்கருவி செய்யும் வகையை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். அதைமிக்க அவதானமாகக் கேட்டு உங்கள் விடுமுறை நாட்களில் அல்லது சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் செய்துபாருங்கள்.

ஒருமுழம் சதுரத்தில் ஒரு பழைய துணியையும் இரண்டடி நீளத்தில் நான்கு நூல் துண்டுகளையும் ஒரு சிறு கல்லையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு நூலையும் துணியின் ஒவ்வொரு மூலையில் கட்டுங்கள். நூல்களின் மறுநுனிகளைச் சேர்த்து முடிந்து அவற்றால் கல் துண்டைக் கெட்டியாகக் கட்டுங்கள்; இப்பொழுது துணியின் நடுப்பாகத்தைப் பிடித்துத் தூக்கினால் கல்லின் கனத்தால் துணியின் மூலைகள் மடிந்து கீழே தொங்கும். துணியை வீசி மேலே எறியுங்கள். கல்லின் வேகத்தால் அது இருபது முப்பது அடி உயரம் வேகமாகப் போகும். பிறகு இறங்க ஆரம்பிக்கும். நான்கு ஐந்து அடி இறங்குவதற்குள் சுருங்கியிருந்த துணி அகன்று கொடுத்துக் குடைபோலத் திறந்துகொள்ளும். உடனே அது இறங்கும். அதன் வேகமும் குறையும். கல் கீழே இழுக்க காற்றுமேலே தாங்கி நிற்க, அது நிதானமாகக் கீழே இறங்கும் அப்போது அதைப்பார்க்க வெகு அழகாக இருக்கும். இதை ஆங்கிலத்தில் பரஷூட் என்று அழைப்பார்கள். இந்த விளையாட்டுக்கருவிதான் ஆகாயக் கப்பலில் அபாயம் ஏற்படும்போது உயிர்காக்கும் கருவியாக உபயோகப்படுகிறது ஆகாய விமானிகள் நூற்றுக்கணக்கான அடிஉயரத்திலிருந்து பரஷூட் மூலமாக நிதானமாய் இறங்குவதைப் படங்களில் பார்க்கலாம். நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

பின்னரும் ஒருவர் நெரியுண்டு மாண்டனர்

சென்றவாரம் சாவகச்சேரி புகைரத ஸ்தானத்தில் புகைரதக்காவலரொருவர் நெரியுண்டிறந்தாரெனத் தெரிவிக்கப்பட்டது. சென்ற வியாழக்கிழமை (11-6-36) மருதானைப் புகைரதத்திற் கணித்தாக ஜோன் விங்கோ என்னும் புகைவண்டிப் பரிசோதகரொருவர் தன் கடமையைச் செய்துகொண்டு தண்டவாளத்தின்மீது நடந்துபோம்போது எதிரேவந்த புகைவண்டி யந்திரத்தினால் தட்டுண்டு வீழ்ந்து சில்லில் அகப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுபோகும் மார்க்கத்திலே உயிர் துறந்தார்.

பலஸ்ரயின் கலகம்.

வெருட்டுக்கு அராபியர் அஞ்சவில்லை

ஜெருசலெமுக்கு வெளியே அராபியர் சுட்டமையினால் 5 யூதர் ஊறடைந்தனர். மேற்படி பட்டினத்திலிருந்து 5 மைலுக்கு அப்பால் ஜெனிகோத் தெருவில் பஸ்கள் போகும்போது அராபியர் சுட்டமையின் ஒரு பஸ்ஸின் சாரதியும் 2 பிரயாணிகளும் ஊறுற்றனர். பின்னர் பட்டாளம் வந்து கலகக்காரரைப் புறங்கண்டது.

தொப்பிதோட்டத்திற் கொள்ளைநோய் பரவுதல்

தொப்பிதோட்டத்திற் பொலிஸ் தானத்திற்கணித்தாகப் பொலிசர் வசிக்கும் ஒரு வீட்டிலே ஒரு பொலிஸின் மனைவி கொள்ளைநோய் கண்டு இறந்தனள். இதனால் பொலிஸ் குடும்பங்களும் பொலிஸாரும் பொலிஸ் உத்தியோகத்தரும் பொலிஸ் தானத்தையும் அயலிடத்தையும் விட்டுக்குடியெழும்பி வேறிடத்துக்குப் போகலாயினர். மானிக்கங்கட்டிடங்களொன்றில் வசித்த 6 வயசுச் சிறுமியொருத்தியும் இந்நோய் கண்டு மாண்டனள். வேறு இஸ்லாமியனும் ஒரு தமிழனும் நோய்கண்டமையினால் தொற்றுநோய்ச் சிகிச்சை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

பிந்திய செய்தி

பட்டினம் முழுவதும் கொள்ளை நோய்த்தானமாய் விட்டது

தொப்பிதோட்டமென்று வழங்கும் ஹற்றன் பட்டினத்திலே கொள்ளைநோய் அதிகம் பரவிவிட்டதால், அது கொள்ளைநோய்க்குரிய பட்டினமெனத் தவிர்க்கப்பட, அங்குள்ள நீதித்தலம் முதலியனவெல்லாம் மூடப்பட, இப்பொழுது கோட்டு விசாரணை முதலியவைகள் நுவரெலியாவிலேயே நடைபெறுகின்றன. இதுவரையில் கொள்ளைநோய் கண்டு அங்கே மாண்டவர் எழுவர்.

தற்கொலைசெய்த பொலிஸ்

சென்ற சனிக்கிழமை (13-6-36) காலை கொழும்புத் திறைசேரியிற் காவலாக நின்ற கன்ஸ்டபிள் விக்கிரமசிங்கி யென்பவன் தானே தன்னைத் துப்பாக்கியாற் சுட்டான்; வைத்தியசாலைக்குக்கொண்டுபோகப் பட்டவிடத்தில் உயிர் நீங்கினன். அவனிடத்திற் காணப்பட்ட கடிதங்களில் தானே தன்னைச் சுட்டு உயிர் மாய்க்கப் போவதாயும் வேறு எவரும் அக்குற்றத்திற் சம்பந்தப்படவில்லை யென்றும் கருத்தமைய எழுதப்பட்டிருந்ததாம்.

வேறுமொரு பொலிஸின் தற்கொலை

பரிசோதகரைச் சுட்டுவிட்டுத் தன்னைத் தான் சுட்டான்

களுத்துறைப் பொலிசைச்சேர்ந்த ரணசிங்கி யென்னும் பொலிஸ் ஏதோ வைரக்காரணமாக பொலிஸ் பிரதான பரிசோதகராகிய மிஸ்ரர் R. இராசேந்திரமென்பவரைச் சுட்டு மோசமான ஊறுபடுத்திவிட்டு ஓடிப்போய்த் தனைத்தானேசுட்டு உயிர் மாய்ந்து கிடக்கக் காணப்பட்டானாம். இராசேந்திரா என்பவர் ஆபத்தான நிலைமையில் வைத்தியசாலையிற் கிடக்கின்றார்.

கந்தவன ஆலய மகோற்சவம்

கந்தவன ஆலய மகோற்சவம் நிகழும் தாது வருஷம் ஆனிமீ ௰-ந் திகதி மங்களவாரம் ஆரம்பமாகுமென்றும் இம்மாதம் 20-ந திகதி சுக்கிரவாரம் இரதோற்சவமும், ௨௪-ந் திகதி மங்களவாரம் தீர்த்தோற்சவமும் நடைபெறுமென்றும், ஆலய ஆதீன கர்த்தர் திரு. திக்கம் சி. செல்லையா பிள்ளை அவர்கள் தெரிவிக்கின்றார்:

நமது சிறுகதை

ஆசையால் வந்த மோசம்

''ரத்தின'' எழுதுவது.

மைசூர் சமஸ்தானத்தில் இராமன் ஒரு பரம தரித்திரன். அவன் இளமையிற் கூடத் தரித்திரனுயிருந்தவன். அவன் பெற்றோர்கள் அவனது சிறு பராயத்திலேயே இறந்துவிட்டார்கள். அன்று தொடக்கம் அவனைப் பிடித்த சனியன் இன்னும் நீங்கின பாடில்லை. அவனுடைய மனைவி சீதனமாகக் கொண்டு வந்த ஒரு பரப்புக் காணியிலேயே அவர்கள் இவ்வளவு நாளுங் குடியிருந்து வந்தார்கள். அதுகூட அவன் மனைவி நோய்வாய்ப் பட்டிருந்த நாட்களிலே வாங்கிச் செலவு செய்த கடனுக்காகக் கடன்காரன விற்றுக் கொண்டு போய்விட்டான். இப்பொழுது இவன் அரசாட்சியாருடைய நிலத்திலேயே வாழ வேண்டியவனுனான். இவ்வளவு கஷ்டத்துக்குள்ளாகியும் இராமன் ஒன்றை மாத்திரம் நம்பியிருந்தான். ''கடவுள் நம்பினோரைக் கைவிடப்பட மாட்டார்'' என்று அவன் பள்ளிக் கூடத்தில் இரண்டாம் வகுப்பிற் படித்ததும், அது சம்பந்தமாக உபாத்தியாயர் அவனுக்குப் படிப்பித்ததும், அவன் பள்ளிக் கூடம் விட்டதுமாகிய எல்லாம் அவனுக்கு ஞாபகத்திலிருந்தன. அதுவே அவன் பிற்கால வாழ்விற்கு எடுத்துக் கொண்ட நம்பிக்கையாகும்.

இராமன் அரசாட்சியாருடைய நிலமாகிய ரோட்டில் வசிக்கத் தொடங்கின இரண்டாம் நாள் மைசூராசன் பட்டஞ் சூட்டி இருபத்தைந்தாவது ஆண்டாகையால் அங்கே அநேகமாகக் குதூகலமான காட்சிகள் நிறைந்திருந்தன. அரசரும் தன தேசத்திலுள்ள ஏழைகளுக்குத் தானம் வழங்குவதற்காக மறுநாளைக் கணித்து வைத்திருந்தார். இந்தச் சங்கதியெல்லாம் எப்படியோ இராமன் காதில் விழுந்தன. யாரோ ஏழைச் சனங்கள் ஒற்றுமையுடையவர்கள். தாங்கள் எவ்வளவு கஷ்டத்தடைந்திருந்தாலும் தங்களைப் போல ஒத்த ஏழைகளுக்கு உதவி செய்யும் இயல்பினர்; பொழுது போவதே இராமனுக்குக் கஷ்டமாயிருந்தது; ஒருவாறு அவன் காத்திருந்த காலமும் வந்தது. அரசனது சந்நிதானத்திலே அநேக ஏழைகள் தங்கள் குறைகளைச் சொன்னார்கள். இராமனுந் தன்னுடைய கஷ்டங்களத்தனையும் விவரமாக எடுத்துக் கூறினான்; அரசருக்கு அவனிலிரக்கம் வந்தது. அரசருக்குச் சொந்தமான சமவெளியான நிலங்கள் பல்லாயிரம் மைல் நீண்டு அகன்று இருக்கின்றன. அதில் கொஞ்ச நிலத்தை அரசனுங் கொடுக்க நினைத்தான. இதையறிந்த மந்திரிகளி லொருவன் 'இராமா' அரசருடைய சமவெளிகளில் நீ எவ்வளவு தேசம் விரும்புகின்றாயோ அவ்வளவு நிலத்தின எல்லையில் ஒரு மரக்கட்டையை அறைந்து விட்டு இங்கு பிற்பகல் 4 மணிக்கிடையில் வந்தது அறிவித்தாயானால் அவ்வளவு தேசத்தையும உனக்குத் தானமாக அரசர் தருவார்'' எனப் பகன்றான். அரசனும உடன்பட்டான். இராமனது சந்தோஷம அளவிடற கரிதாயிற்று. கடவுளின் கருணைத்திறத்தை வியந்தான். ''இவ்வளவு செல்வனுக்கவா இராமனைப் பிறவி தொடக்கம அவர் வறியவனுக்கினார்'' அடே! இராமா! இங்கே வாடா என்றவர்களெல்லாம் நாளைக்கு அவனை ''ஐயா, துரை'' என அழைக்கப்போகிறார்கள். அயல் வீட்டுக்குத் தானும் தெரியாத இராமன் என்னுமவனுடைய பெயர் நாளைக்குத்தொடக்கம் ஸ்ரீமான் இராமசாமிஐயங்கார்எனத் திரிக்கப்பட்டு எல்லாப் பத்திரிகைகளிலும் வழங்கப்படும். சாதாரணமாகத் தெருவில் நூறு தடவை அலைந்து திரியுமவனை நாளைக்குத் தொடக்கம் பத்திரிகை நிருபர்களும் ஓட்டோகிராவ் வேண்டுகிறவர்களும் புகைப்படம் எடுப்பவர்களும் சூழ்ந்து கொள்ளப் போகிறார்கள். அவனுடைய ஒவ்வொரு சொல்லும் தவறுமல் நீயூட்டர் தந்திகளிற் பத்திரிகைகளுககு அடிக்கப்படும். இராமன் வெறும் யோசனைகளில் ஈடுபட்டுத் தன்னை மறந்து நிற்கும் பேர்வழியல்ல. இப்பொழுது யோசனைகளில் ஈடுபடாமற் காரியத்தைச் செவ்வனேசெய்து விட்டால் இப்போது மனோராஜ்யத்தால் ஒரு கொஞ்ச நேரம் அனுபவிக்கும் இவற்றை உண்மையில் அநேக காலம் அநுபவிக்கலாமென்று அவனுக்குத் தெரியும். அவன் காலந் தாழ்க்காமல் அரசனுக்கு வணக்கத்தைச் செலுத்தி விட்டு ஓடத் தொடங்கினான். ஒரு கணமேனுந் தாமதிப்பதற்கில்லை. சாப்பிடுவதற்குக் கூட அவன் நிற்கவில்லை; இன்று மத்தியானம் மட்டுந் தானே பட்டினி கிடப்பது. அதுவும் இராமனுக்கு மத்தியானத்திற் சாப்பிட்டு வழக்கமு மில்லை. இராமன் புல் நிலங்களைக் கடந்து ஓடத் தொடங்கினான் நிலத்தில் அவனுடைய கால்கள் படுகின்றனவோ வெனக் கண்டவர்கள் ஐயுறும்படி அவன் ஓடுகிறான். ஒன்பது மணிக்கு ஓடத் தொடங்கியவன் பதினொரு மணிக்கு முப்பது மைல் தாண்டி விட்டான். இராமன் எவ்வளவு விரைவாக ஓடினாலுந் தன்னுடைய காணியாகப் போகிறதைப் பார்வையிட்டுக் கொண்டே செல்கிறான் இன்னும் அநேக முறை ஓடுஞ் சிரமமில்லாமல் மோட்டாரத்தில் வந்து பார்ப்பானுயினும் இப்பொழுது ஓடும் பொழுது பார்க்காமல் ஓடுவதா? மணி பன்னிரண்டாயிற்று. ஆயினும் இராமன் ஓடுகிறான். அவனுக்குக் கடவுள் செட்டையைப் படைத்திருந்தால் எப்படி நன்றாயிருக்கும். அவனுடைய மனம் அவனிலும் பத்தாயிரமடங்கு முன்னிற்கிறது. ஒருமணியாய் விட்ட பிறகுதான் இராமனுக்குக் களை தோற்றுகிறது. எனினுங் காரியத்தை விடக் கூடாதல்லவா? வலிய வருகிற சீதேவியைச் காலாலுதைப்பதா? இராமன் போய்க் கொண்டேயிருக்கிறான். ஆனால் முந்தின கெதியில்லை. இரண்டு மணியாயிற்று; இதை இராமன் சூரியனைப் பார்த்து அறிந்து கொண்டான். இப்பொழுது தான் அவனுக்கு நாலு மணிககு அரசனுடைய மாளிகையில் நிற்க வேண்டும் என்பதை உணர்ந்தான். ஆ! இதை அவன் ஒரு மணித்தியாலத்திற்கு முன் அறிந்திருந்தால் எவ்வளவு நல்லது. சூரியனைக் கட்டுவதற்கு எவ்வளவு விரும்பினான் பாவம்! அவன் ரூபதுமன் பிள்ளையல்ல. ஆனால் தயங்குவதிற் பலனில்லை. சிக்கிரத்தில் ஒரு கட்டையை நிலத்தில் கட்டான். திரும்பி எடுத்தான் ஓட்டம். அவன் நாலு மணித்தியாலம் ஓடியதை எப்படி இரண்டு மணித்தியாலத்தில் அதுவுங் களைத்த நேரத்தில் ஓடுவது? என்றாலும் இராமன் மனஞ் சலிப்பவனல்ல. கடைசி வரைக்கும் விட்டுக் கொடாதவன். ஒரு மணித்தியாலமாயும பாதிக்கு மேல் தேசமிருக்கிறது. இராமன் முன்னிலும் பார்க்கத் தைரியத்தைச் சேர்த்துக் கொண்டோடினான் ஓடும் விரைவில் ஏதாவது நடக்கினுங் கரணம் போட்டு எழுந்து ஓடுவான். இப்படியே ஓடி நாலுமணிககு ஐந்து நிமிடங்களிருக்க இரண்டு மைலுக்கப்பால் வருகின்றான். அநேகர் கூடி நாலு மணிக்கு இராமசாமி ஐயங்காராகப் போகும் இராமனை எதிர் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவன் ஓடுகிறானே அல்லது பறக்கிறானே தெரியவில்லை. நாலு மணி அடித்தது; இராமன் அரசன் முன்னிலையில் ''பொத்'' என்று விழுந்தான். விழுந்த இராமன் எழுந்த பாடில்லை; அவனுடைய யோகமும் போய்விட்டது. இராமனை அரசனேவலர்கள் எடுத்துப் புதைக்க வேண்டியவர்களானார்கள். ஆகவே இராமனுக்குத் தேவையான நிலம் ஆறடியே. இந் நிலத்தைக் கடைசியாக அவன் கட்டாயம் பெற வேண்டியவன். இராமனைப் போல் மனிதராகிய எங்களுக்குமு தேவையான நிலமும் அவ்வளவேயாக

பரிசளிப்பு

காரைநகர் வியாவிற் சைவ பரிபாலன வித்தியாசாலை.

காரைநகர் சைவபரிபாலன வித்தியாசாலையின் வருடாந்தப் பரிசளிப்புக் கொண்டாட்டம் நிகழும் தாது ஞு வைகாசி மீ உடு (7-6-36) ஞாயிற்றுக்கிழமை இரவு 6½ மணியளவில் ஷை வித்தியாசாலை திருநாவுக்கரசு நாயனூர் மண்டபத்தில் வடபகுதி வித்தியாதரிசி ஸ்ரீமான். மு. தம்பிப்பிள்ளை அவர்களது தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது.

தலைமை ஆசிரியரவர்கள் தலைவரவர்களுக்கும் உபந்நியாசகர் மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் ஸ்ரீமான் வீ. வீரசிங்கம B. A, (LOND) அவர்களுக்கும வரவேற்புபசாரஞ் செய்ததும, தலைவரவர்களெழுந்து இவ்வித்தியாசாலையானது 1924ம் ஆண்டளவில் அதிசுகேவலஸ்திதியிலிருந்ததென்றும், அதனுல் தாம இவ் வித்தியாசாலையைப்பற்றி மூடிப்படியான குறிப்புகளெழுத நேரிட்டகாலத்துக் கவலைப்பட்டதாகவும் அடுத்தவருட ஆரம்பத்தில் தற்போதைய மனேஜரவர்களையமைத்து வித்தியாசாலையின் பொறுப்பையேற்று புதிய கட்டிடங்களமைத்து வேண்டிய திருத்தங்கள் செய்து நடத்தும்படியாகக் கேட்டதாகவும் அதற்கு அவர்கள் சம்மதித்து வித்தியாசாலையின் பொறுப்பை யேற்றுத் தற்போதைய சிறந்த கட்டிடங்களையமைத்து உன்னத நிலைக்குக் கொண்டுவந்திருப்பது பாராட்டப்படத்தக்கதென்றும் விசேஷமாக இவ்வித்தியாசாலையில் நெசவுத் தொழிலையும் நடாத்திவருவது எம் தேசமுன்னேற்றத்திற்குப் பெரும் நன்மையானதென்றும் ஆரம்ப உபந்நியாசஞ் செய்தனர்.

பின்னர்த் தலைமை ஆசிரியரவர்கள் 1935-ம் ஆண்டின் அறிக்கையை வாசித்ததும் மாணவர்களாலப்பியாசங்கள் நிகழ்த்தப்பட்டன.

அதன் பின்னர் தலைவரவர்கள் 1935-ம் ஆண்டில் விசேஷ திறமைகாட்டிய மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர்கள். அன்றியும் ஆசிரியர்களுள ஒருவராகிய ஸ்ரீமான. க. பொன்னம்பலம அவர்களுக்கு வரவுக்கிரமத்திற்கும் வித்தியாசாலையின் வேலையில்வெகுசிரத்தையெடுத்துக் தொண்டாற்றிய தற்கும் நன்றி பாராட்டுவதற்காக வித்தியாசாலைப் பொறுப்பில் தஞ்சைவாணன்கோவை என்னும் அரிய புஸ்தகம் உபகரிக்கப்பெற்றது.

பின்பு உபந்நியாசகரவர்கள் 'யாழ்ப்பாணநாட்டுக் கைத்தொழில்'' என்னும விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு ஓர் சிறந்த உபந்நியாசஞ் செய்தனர்.

அதன்மேல் தலைவரவர்கள் இற்றைய நிகழ்ச்சியில் தாம் அதிக சந்தோஷப்படுவதாகவும் உபந்நியாசகரவர்களது உபந்நியாசத்தை நாம் கைக்கொள்ளுவோமாயின் எம் தேச முன்னேற்றத்திற்குப் பெரும் நன்மையாகுமென்றும அவர்களது உபந்நியாசத்தைப் பின்பற்றி இவ்வித்தியாசாலையில கைத்தொழில் நடத்தப்படுவது போற்றத்தக்கதென்றும் அப்படியாக ஏனைய வித்தியாசாலைகளும் பின்பற்றி நடப்பது எம்தேச முன்னேற்றத்திற்குப் பெரும் நன்மையை உண்டாக்குமென்றும் முடிவுரை உபந்நியாசஞ் செய்தனர்.

ஈற்றில் மனேஜரவர்களெழுந்து எம தலைவரவர்களும் உபந்நியாசகரவர்களும் இன்று எங்கள் சமுகத்தில் வீற்றிருப்பது போற்றப்படுவதற்குரியதென்றும் தலைவரவர்களின் பேருதவியாலேயே இவ்வித்தியாசாலையானது இவ்வுந்த நிலைக்குவந்ததென்றும் உபந்நியாசகரவர்கள் கைத்தொழில் என்னும் விஷயத்தில் வெகு ஆராய்ச்சி செய்து வருவதும் உபந்நியாசங்கள் மூலமாகத் தொண்டாற்றி வருவதும எம் தேச முன்னேற்றத்திற்குரிய கருமங்களாகுமென்றும் வித்தியாசாலையாசிரியர்கள் இற்றைய நிகழ்ச்சிகள் செவ்வனே நடத்தற்கு ஆவனசெய்தமை போற்றப் படத்தக்கதென்றும் சபையோர் அமைதியாக நிகழ்ச்சிகளைக் கவனித்தமை பாராட்டத்தக்கதென்றும் நல்லுபசாரங் கூறினர்

இரவு 9½ மணியளவில் தேவார பாராயணத்துடன் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

''மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்''

—கடித

உலகம்பலவிதம்

(முற்றொடர்)

''ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்.''

என்பது பெரியோர் வாக்கல்லவா! இராமசாமிப்பிள்ளை ஒன்றை நினைத்திருக்கத் தெய்வம் பிறிதொன்றை நினைத்துவிட்டது. ஐயோ! பாவம்! உத்தம கன்னிகையாகிய பங்கஜம் தன்னைப்பிடித்து வருத்திய நெருப்புச் சுரத்திற்கு இரையானாள! மகள்மாண்டாள் என்றதை அறிந்த மாத்திரத்தே இராமசாமிப்பிள்ளை இடியேறுண்ட சர்ப்பம்போலானார்! பறுவதம் அறிவுகெட்டாள்! அயலார் சுற்றத்தார் பங்கஜத்தை அறிந்தவர் எல்லாரும் தத்தம் பிள்ளையைப் பறிகொடுத்தார்போல இந்த உத்தம கன்னிகை விஷயத்திற் கலங்கினர்கள்; கவலைப்பட்டார்கள். இழவுவீட்டிற்கு வந்த பெண்கள் புலம்பக்கூடிய அளவு புலம்பிவிட்டுப் பரஸ்பரம் பேசத் தொடங்கினர்கள்.

* * *

ஐயோ, இந்தப் பிள்ளையின் கதி இப்படியாகுமென்று, அன்றைக்கு நான் வருத்தம்பார்க்க வந்தபோதே எனக்குத் தெரியும். நான் ஒருவருக்கும் வெளிவிடவில்லை. கடவுள் கொடுக்காமல் இருக்கலாம். கொடுத்துவிட்டு இப்படி இடையில் பறித்துக்கொண்டுபோகக்கூடாது' என்றாள் ஒருத்தி. ''ஆ தெய்வமே! இது கொடுக்குங் கொடையோ! பெற்று வளர்த்துப் படிப்பித்துப் பணிபூட்டி அலங்கரித்துப் பார்த்து மகிழ்ந்த பெற்றவளும் பெற்றவனும் இந்தப் பிள்ளையின் மணக்கோலத்தைக் கண்டுகளிக்காமல் இப்பிணக் கோலத்தைக் கண்டு கவலைப்பட வந்ததோ! இந்த இரண்டு பேரும் இவ்வளவு பாவிகளா!'' என்றாள் மற்றொருத்தி. ''என்ன அநியாயம், இரண்டு மூன்றுவருட காலமாகக் குமரிருந்த இந்தப் பிள்ளை, வாழ்க்கைப்பட்டு இன்னமும் இரண்டு வருடம் இருந்து பின் இறந்தால், மனசுக்குக் கொஞ்சமாவது ஆறுதலாயிருக்குமெடி மச்சாள்! அந்தக் கொடிய யமன் துடிக்கப் பதைக்கக் கொண்டுபோனனே'' என்று திட்டினாள்வேறொருத்தி. ''எல்லாம அளந்த அளவின்படிதான் கிடைக்கும், கடன் அறவிடப் பிறந்தது; கடன் அறவிட்டு ஆய்விட்டது. தாய் தகப்பனைக் கலங்கவைத்து விட்டுப் புண்ணியவதி கைலாயம் போய்விட்டாள்'' என்று சொல்லிக் கலங்கினாள் பிறிதொருத்தி. ''ஆ! பாவம்! பெற்றவள் கிடக்குங் கிடையையும் அந்த மனுஷன் படும்பாட்டையும் பார்க்க வயிறெரிகிறதே; அந்தப் பிள்ளையிருக்க, இந்தக் கருமிகளை வந்த யமன் கொண்டு போகக்கூடாதா'' என்றாள் இன்னொருத்தி. ''போ, போ, பைத்தியக்காரி, உனக்கென்ன தெரியும்! நீ முக்கைநாட் பெட்டை, நாங்கள் நினைத்தபடியா சாவதும் இருப்பதும்; நான் என் ஏழுமக்களில் அஞ்சு பேரையும் பறிகொடுத்து விட்டு இரண்டோடு இன்னமும் இருக்கிறேன்; என் பிள்ளைகளைக் கதறக்கதறக் கொண்டுபோன யமன் என்னைக் கொண்டுபோகக்கூடாதா' என்று நியாயம் பேசத் தொடங்கினாள் 62 வயசுவரையிலுள்ள ஒரு கிழவி.

* * *

பெண்கள் மாத்திரமல்லர் அங்கு அச் சமையத்திலே வந்திருந்த ஆண்களும் பங்கஜத்தின் அகால மரணத்தையிட்டுப் பல பேசிக் கவலைப்பட்டனர், ''பெற்றுரின தவக் குறைவாற்றுனே இந்தப் பிள்ளை இப்படி இடையிற்போனது; தவத்தளவேயாகுமாம் தான்பெற்ற செல்வம்....'' என்றார் அங்கிருந்த ஒருவர்; ''விதியைவிலக்கமுடியுமா'' என்றார் இன்னுமொருவர்; ''இடையிலே இப்படி மோசம்போவதற்குத்தானே இந்தப் பிள்ளை நல்லவள் என்று பேர்கேட்டாள்...'' என்றார் மற்றொருவர்; ''ஐயோ, வேண்டாம் வேண்டாமென்ன, பதினறுபிள்ளைகளைக் கொடுக்கிறார் கடவுள் நித்திய தரித்திரக்காரனுக்கு; அந்தப் பிள்ளைகள் குடிக்கக் கஞ்சிக்கும் வழியற்றுச் சங்கடப்படுகிறார்கள்; மலைபோலப் பணத்தைக்குவித்துவைத்திருக்கும் இந்த இராமசாமிப்பிள்ளைக்கு அப் பணத்தை அநுபவிக்கப் பிறந்த ஒரேயொரு குழந்தையும் போய்விட்டதே! இதுவும் தெய்வச் செயல்தான்'' என்றார் வேறொருவர். ''ஆம், ஆம், அலகிட்ட முட்டாட் செய்ய அம்புயத்துறைவோன்சால—மலைநிட்ட செல்வத்தோர்கள் வழங்க ஓர் மகவு தாரான், என்று முன்னோர் பாடியது இதனை அறியாமலா'' என்றார் அங்கு வந்திருந்த வித்துவான் ஒருவர்.

* * *

இப்படி இவர்களெல்லாரும் பேசிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் சமையத்திலே, அபரக்கிரியைகளைச் சீக்கிரம் முடிக்கவேண்டுமென்று தேசிகர் சொல்ல, மனமுடைந்து ஒரு புறத்தே கண்ணீர் பெருகச் சாய்ந்துகிடக்கும் இராமசாமிப்பிள்ளையை அங்கு வந்த பெரியார் ஆற்றித் தேற்றி ஸ்நானஞ் செய்வித்துக் கிரியைக்காகிய இடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்; அழுதழுது இராமசாமிப் பிள்ளையுங் கிரியைகளைச் செய்து முடித்தார். சகல வரிசைகளோடும் மயானத்திற்குச் சவங் கொண்டு போய் அங்குச் செய்யவேண்டியனவெல்லாம் கிரமமாகச் செய்யப்பட்ட பின் எல்லாரும் இராமசாமிப்பிள்ளையோடு அவர் வீட்டில் வந்து சேர்ந்தனர். ஆனாற் பறுவதம் மயக்கத்துடனேயே காணப்பட்டாள். அவளை அங்குள்ள பெண்கள் ஆற்றித்தேற்ற முயன்றார்கள், வாய்க்கவில்லை. இராமசாமிப்பிள்ளைக்குச் சொல்ல அவர் கவலையோடு பறுவதத்திடம் வந்து முகத்திலே தண்ணீர் புரோட்சித்து ஒருவாறு அறிவுவரச் செய்தார். அறிவு வந்தவுடன்பறுவதம் ''ஐயோ என்பிள்ளை எங்கே'' என்று ஆவலுடன் கேட்டாள்; ''உன்பிள்ளை கைலாயத்தில் இருக்கிறாள்; சில நாட் போக மீண்டும இங்கே வருவாள்......'' என்றார் தன் மனைவியின் அசட்டுத்தனத்தை அறிந்த இராமசாமிப் பிள்ளை. அதை மெய்யெனநம்பி அவள் ஒருவாறு மனந்தேறினாள். பின்னர் அங்கு நின்றோர் கேள்விக்கு இணங்கித் தாயும் தகப்பனும் ஏதோ ஆகாரம் உட்கொண்டார்கள். வந்தவர்களும் மீண்டு தத்தம் இல்லஞ் சேர்ந்தனர். (வரும்)

கடிதர்க்கு விடை

காரைநகர், வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கக் காரியதரிசிக்கு:—

உமது குறைகளை வித்தியாபகுதி மேலதிகாரிகளுக்குத் தெரிவித்துக் கொள்வதே தக்கதாகும். ப-ர்

சென்னையில் காந்திஜி

சென்னை, 13உ

மைசூர் சமஸ்தான விருந்தாளியாகத் [illegible], நந்திமலையிற்சிறிதுகாலம் தாமதித்துவிட்டு காந்திஜி தம்முடைய கோஷ்டியுடன் இன்று காலையில் சென்னைவந்து சேர்ந்தார். உடன் அவர் வார்தாவுக்குப் பயணமானார். புறப்படுவதற்கு முன்னர் அவர் மாஜி காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் எஸ். சீனிவாஸ ஐயங்காரவர்களைச் சந்தித்துப் பேசினர். ஹரிஜன சேவைக்காக அவருக்கு மைசூரில் 4000 ரூபாய் வசூலானதாகத் தெரிகிறது

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

47 - ம் ஆண்டு நிறைவுவிழா

நிகழும் தாது ஆண்டு ஆனித்திங்கள் 7-ம் நாள் (20-6-36) சனிக்கிழமை பிற்பகல் 4½மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் ஷை சபையின் 47 - ம் ஆண்டு நிறைவுவிழா கொண்டாடப்படும்.

அவ்வமயம் அங்கத்தவர்கள் அனைவரும் சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டிக்கோள்ளப்படுகின்றனர்

க. ஆ. கந்தப்பசேகரம்
கௌரவ காரியதரிசி

வண்ணார்பண்ணை.
5-6-36

நிகழ்ச்சி முறை.

1. தேவாரம்
2. சென்ற ஆண்டுக் கூட்டவரலாறு
3. வருடாந்த அறிக்கையும் வரவுசெலவுக் கணக்கும்
4. புதிய ஆண்டின் உத்தியோகத்தர் தெரிவு
5. தேவாரம்.
6. சிற்றுண்டி

குறிப்பு:—

அங்கத்தவர்கள் தங்கள் சந்தாப் பணத்தைக் கொடுக்குமாறும் வேண்டிக்கொள்ளப் படுகின்றனர்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக முந் துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுஸு
ஆனி மீ ௫உ வியாழக்கிழமை

பயனற்ற கல்வி

II

இக்காலத்தில் ஊட்டப்படும் கல்வியெனிலோ, இங்குள்ள மக்களின் சமய அறிவிற்கு இடையூறானது; சாதியாசாரங்களை மறக்கச்செய்வது; கைத்தொழில் விவசாயம் வியாபாரம் என்னுமிவைகளில் வெறுப்பையுண்டாக்குவது; போலிச்செருக்கைப் புகட்டுவது; எந்த உண்மையிலும் சந்தேகத்தைப் பிறப்பிப்பது; சுதேசப் பொருள்களைப் புறக்கணித்து அந்நிய நாட்டுப் பொருள்களை அபிமானிக்கும்படி தூண்டுவது; பிள்ளைகளுக்கு தாந்தாம் பிறந்துள்ள நாட்டின் பூர்வீகம் தங்கள் மூதாதைகளின் வீரச்செயல்கள் பெருந்தன்மைகள் அவர்கள் வாழ்ந்த உத்தம வாழ்க்கைகள் செய்த தியாகங்கள் முதலியவற்றை யெடுத்துக்காட்டி ஊக்கம் பிறக்கச் செய்தலின்றி அந்நியநாட்டாரின் வீரச் செயல்கள் விவகாரங்கள் முதலியவற்றை மாத்திரம் போதிப்பது.

இனித் தமிழ்க்கல்வி விஷயத்திலெனிலோ, மூதுரை முதலியன பயிற்றப்படுதலில்லை; திருக்குறள் போன்ற அரிய நூல்கள் அலட்சியஞ் செய்யப்படுகின்றன. இலக்கணமென்பது எள்ளளவுமில்லை; நிகண்டென்ற பேச்சங் கிடையாது. பழைய புலவர்கள் வித்துவான்கள் பெரியார்களைப்பற்றி யாதும் அறிதல்முடியாது. சுருங்கச் சொல்லுகில் தெய்வமொழியென்றும் இனிய புராதனமான பாஷையென்றும் பாராட்டப்படும் தமிழ் மொழி அதற்குரிய மரபுடனும் முறைப்படியும் பயிற்றப்படுதல் இல்லையெனலாம்.

இனி இங்கே பயிற்றப்படும் ஆங்கிலக் கல்வி யெனிலோ அதிக செலவுக்குஞ் சிரமத்திற்கும் கட்டுப்பாடுகளுக்கும் உரியதேயல்லாமல் ஒருவாற்றானும் பூரணமானதல்ல; இக்காலத்து மாணவர்கள் நாட்டுவளப்பம் அறியாத கிணற்றுத் தவளைகள் போலவே காணப்படுகின்றார்கள

இந்தக் குறைகளை யெல்லாம் நீக்கித் தேசியக் கல்வியையும் தொழிற்கல்வி விவசாயக்கல்விகளையும் விருத்திபண்ணுவதற்கு ஆவசியகம் வேண்டியதென்ன? இக்கீழைத்தேசத்தவர்கட்கு ஆகிய முறையில் அமைக்கப்பட்ட ஒரு சர்வகலாசங்கமே வேண்டியதாகும். இச்சர்வகலாசங்கத்தை ஆங்கில கலாசங்க முறையில் அமைப்பதை விடுத்து சென்னை, கல்கத்தா, பம்பாய் முதலிய இந்திய சர்வகலா சங்கங்களின் முறையைப் பின்பற்றி அமைத்தல் வேண்டும். ஆங்கில மொழியில் ஆரம்பக் கல்வியை முடித்த பின் தொழிற் கல்வியைப் பயில விரும்பும் மாணவன் அதனையும், விவசாயக் கல்வியைப் பயில விரும்புபவன் அவ்விவசாயத்தையும் வேறு துறைகளிற் பயில விரும்பும் மாணவன் அவ்வத்துறைக்குரிய கல்வியையும், உயர்தரக் கல்வியை விரும்பும் பிள்ளை அதனையும் பயிலத் தக்க வசதிகள் இருத்தல்வேண்டும். எந்தப் பிள்ளையாயினும் தன் கல்வியை முடித்துக்கொண்டு பள்ளிக்கூடத்தை விடும்போது ஏதும் ஒரு துறையில் உழைத்துப் பொருளீட்டுவதற்கு வழிகாட்டுவதே சர்வகலாசங்கத்தால் அடையக்கூடிய பயனாக இருத்தல் வேண்டும். படிப்பவர்கட்குச் சிரமம் அதிகமாயிருந்தாலும் பொருட்செலவு குறைந்ததாகவிருந்தாற்றான் ஏழை மக்களும் கல்வி பயிலுதல் முடியும்.

இவைகளை யெல்லாம் உத்தேசித்து அரசினரும் அரசாங்கசபை மந்திரிமார் அங்கத்தவர்களும் சேர்ந்து கூடிய சீக்கிரத்தில் ஒரு சிறந்த சர்வகலாசாலையை இலங்கையிலே தாபிப்பார்களா?

உருஷியாவின் புதிய அரசியல்

1917-ம் ஆண்டில் உருஷிய நாட்டில் தோன்றிய புரட்சி காரணமாக அங்கு பொதுவுடைமைக் கொள்கை கையாளப்பட்டு வந்தது. இதனால் அந்நாட்டில் பொதுமக்களுக்குச் சுதந்திரம் கிடைக்குமென்றும், பன்னூறாண்டுகளாகத் தமது இச்சைப்படி பொதுமக்களை அடக்கி ஆண்ட மன்னர்களது அநியாயமும் அதிகாரமும் அறவே ஒழியும் என்றும் கருதப்பட்டது. இஃது ஓரளவிற்கு உண்மையேயெனினும், அங்கு நிலைமை முற்றாக மாறிவிடவில்லை. பொதுமக்களது பெயராலேயே சோவியத் அரசாங்கம் நடைபெற்ற போதினும், உண்மையில், லெனின், டிராட்ஸ்கி, ஸ்டாலின் போன்ற சர்வாதிகாரிகளின் ஆணைப்படியே யாவும் நடைபெற்று வரலாயின. தனிப்பட்ட எவர்க்கும் அங்கு சுதந்திரமே கிடையாது. மேற்கூறிய சர்வாதிகாரிகளது கொள்கைக்கு மாறானோரைத் தலையெடுக்க வொட்டாமல் தடுப்பதற்காகப் பல அட்டூழியங்கள் கூட அங்கு நடைபெற்றன. வெளிநாட்டார் கருதியதுபோல அங்கு இன்பம் நிலவியிருக்கவில்லை. அந்நாட்டு மக்கள் பலவித கஷ்டங்களுக்குள்ளாகியிருந்தனரென்றே கூறலாம். ஆயின, சென்ற வியாழக்கிழமையோடு அங்கு சில மாற்றங்கள் ஏற்படலாயின. அதன் பலனாக, இக்கஷ்டங்களும் ஒருவாறு நீங்கும் என்றே எதிர்பார்க்கப் படுகின்றது. இம்மாற்றத்தின்படி, பொதுவுடைமை ஆட்சிமுறை என அழைக்கப் பெற்றுவந்த சர்வாதிகாரிகள் ஆட்சிமுறை ஒருமுடிவிற்கு வந்துள்ளது. அங்கு 18 வயசுக்கு மேற்பட்டவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக்கொண்ட சபை அரசாங்கத்தை நடத்துதற்கு சோவியத் சபைத் தலைவர் அநுமதியளித்துள்ளார் எனத் தந்திச் செய்திகள் தெரிவிக்கின்றன. அவற்றுள் ஒன்றை இற்றைப் பிரசுரத்திற் பிறிதோரிடத்திற் காண்க. இவ்வரசியல்முறை பிரான்சிலும் பிரிட்டனிலும் உள்ள முறையைத் தழுவியுள்ளதாகும். இதனால், தனிப்பட்ட மக்கள் தாம் இழந்திருந்த சுதந்திரத்தை மீளவும் பெற்றுவிட்டார்களென்றே கூறலாம். அன்றி, மற்றொரு மாற்றமும் உருஷியாவில் உண்டாயிருத்தல் கருதத்தக்கது. இதுகாறும், சோவியத் அரசாங்கம், வேண்டுமென்றே வேற்றுநாடுகளில் தலையிட்டு அங்கெல்லாம் தமது பொதுவுடைமைக் கொள்கையைப் பரப்ப முயன்று வந்தது. இதனால் மற்றைய அரசாங்கங்கள் அதனமீது சதா ஐயங்கொள்ள வேண்டியும் நேரிட்டிருந்தது. ஆயின், இப்பொழுதோ, உருஷியா உலக நன்மையை நாடி, நாகரிக முற்ற மற்றைய நாடுகளோடு ஒத்துழைக்க முற்பட்டிருக்கின்றதென அறியக்கிடக்கின்றது.

உருஷியாவின் உண்மையான நிலை எத்தகையது என்பதை இதுகாறும் உள்ளவாறு தெரிவித்தற்குப் பல தடைகள் இடப்பட்டிருந்தன. உருஷியாவின்மீது மற்றைய அரசாங்கத்தார் கொண்டுள்ள ஐயமும அச்சமுமே அதற்கு முக்கியமான காரணம் என்று கூறலாம். எனினும், அங்கு பொருளாதார முன்னேற்றத்திற்காகக் கையாளப்பட்டுவந்த ஐந்து வருஷத் திட்டம் பல நற்பயன்களை விளைவித்திருக்கின்றதெனக் கூறப்படுகிறது. அங்கு சென்று நிலைமையை நேரிற் கண்டு திரும்பியவர்கள் எல்லோரும் அங்குள்ள சமூக முன்னேற்ற நிலையை வாயாரப் புகழ்ந்துள்ளார்கள். இத் திட்டம் ஏனைய நாட்டினர்க்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாதல் காண்க. இதுவேயன்றி, எதிர்காலத்தில் உருஷியாவின் நிலைமையை உள்ளவாறே பக்ஷபாதமின்றி அறிந்து கொள்ளுதற்கும் ஒரு வசதி ஏற்பட்டிருக்கின்றது.

உருஷியா சாதாரணமான நாடன்று. அது பிரமாண்டமான தேசம். அதிலுள்ள ஜனத்தொகை ஏறக்குறைய 15கோடி ஆகும். இத்தகைய ஒரு நாட்டில், சர்வாதிகாரிகள் ஆட்சி நீங்கி ஜனநாயக ஆட்சிமுறை ஏற்பட்டிருத்தல் சுதந்திரதாகமுள்ள எவர்க்கும் இன்பம் பயப்பத் தோன்றும். அன்றியும், பிறரது ஐயத்திற்கும் அச்சத்திற்கும் காரணமாயிருந்த இந்த நாடு, அவற்றை நீக்கி உலக நன்மைக்காக வேற்றுநாடுகளோடு கலந்துழைக்க முன்வந்தமையும் பொதுவாக உலக சமாதானத்திற்கும் சிறப்பாகக் கீழைத்தேசங்களின் அமைதிக்கும் ஓர் அறிகுறியாகின்றமையும் குறிக்கத்தக்கது. ஆகவே இந்நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றம் எவராலும் விரும்பி வரவேற்கத்தக்க தொன்றாம்.

இந்துக் கல்லூரியிற் பெண்களும் கற்கலாம்

அரசினர் அனுமதி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 1-1-36 தொடக்கம் பெண் பிள்ளைகளும் கல்வி கற்பதற்கு அரசினர் அனுமதி அளித்திருக்கின்றார்களென அறிகின்றோம்.

தோல் பதனிடுந் தொழில்

வர்த்தகக் கமிஷனரின் ஆலோசனை

கொழும்பு ஜூன் 12—

இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும் பாம்பு, உடும்பு முதலிய ஊர்வனவற்றின் தோல்களுக்கு மிகுந்த தேவை இருக்கின்றனவாம். அங்குள்ள தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கையில் மேற்படி தோல் தயார் செய்து அனுப்பினால் தக்க லாபமடையலாம். அரசாங்கத்தாரே மேற்படி ஸ்தாபனம் ஏற்படுத்தினாலும் அல்லது தனிப்பட்டவர்களேற்படுத்தினாலும், தக்க லாபம் ஈட்டலாமென்று லண்டனில் உள்ள இலங்கை வர்த்தகக் கமிஷனர் டாக்டர் பால் பீரிஸ் கொழும்பிலுள்ள வர்த்தக விருத்தி டைரக்டருக்கு அறிவித்திருக்கிறார். இலங்கையில் பாம்பு உடும்புத்தோல் பதம் செய்யும் ஸ்தாபனத்தை நிறுவுவது சம்பந்தமாக இப்போது விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன. இவ்விஷயம் விரைவில் மந்திரிசபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும். பாம்பு, உடும்பு, இவைகளின் தோல்களைவிட முதலைத் தோல் மீதுதான் மேனாட்டாருக்கு அபாரப் பிரேமை ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அயல் நாட்டு ஸ்தாபனம் ஒன்று இலங்கையின் வாண்ட பிரதேசத்தில் கைவிடப்பட்டுள்ள ஒரு குளத்தை முதலை வளர்ப்பதற்காக தங்களுக்கு விட்டுவிட முடியுமா? என்று அரசாங்கதாருக்கு மனுச் செய்து கொண்டார்களென்றும் அது சம்பந்தமான விபரம் அப்படியே மாண்டு போய்விட்டதென்றும் கூறப்படுகிறது:

சோவியத்தில் புதிய அரசியல்முறை

பிரஜைகளுக்கு ஏராளமான உரிமைகள்

மாஸ்கோ, ஜூன் 12—

சோவியத்தில் புதிய அரசியல் முறை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இதன்படி சோவியத் பிரஜைகளுக்கெல்லாம் ஏராளமான உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆட்சிமுறையைக் கண்டிப்பது சம்பந்தமாகவிருக்கும் நிர்ப்பந்தங்களை அரசினர் ரத்துச்செய்துவிட்டார்கள். 18 வயதுக்கு மேற்பட்டவர்களெல்லாம் ஓட்டுரிமை பெறுவர். சட்டசபையின் ஆயுள் சாதாரணமாக 4 வருஷகாலமாகும். மத்திய சர்க்காரில் இரண்டு சபைகளிருக்கும். சபைகளுக்கும் தலைவர் பதவிக்கும் ரகசிய ஓட்டு மூலம் தேர்தல் நடைபெறும் என்று ஒரு ரியூட்டர் செய்தி தெரிவிக்கின்றது

"யாழ்ப்பாணத்துப் பொலிசரே அரோக திடகாத்திரமுடையர்"

பொலிஸ்பகுதித் தலைவராகிய ஸேர் ஹேர்பேர்ட் டௌபிகன் சென்ற வாரம் வடமாகாணத்திலுள்ள பொலிஸ் தானங்களைச் சோதிக்கும் நோக்கமாக இங்கே வந்து நின்றபோது பின்வருமாறு கூறினர்:—

"இந்த யாழ்ப்பாணம் சுகத்திற்கேற்ற ஊரல்ல என்பது பலருடைய எண்ணம். ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பொலிஸரே அரோக திடகாத்திரமுடையரென்பது என்னுடைய அநுபவம். நீடித்த காலமாக வடமாகாணத் தலைவராகவிருந்த ஸேர் உவில்லியம் துவைனம் இவ்வியாழ்ப்பாணத்திலேயே தம்முடைய எஞ்சிய காலம் முழுவதையுங் கழித்துத் தம்முடைய 95-ம் வயசில் இங்கேதான் இறந்தார். யாழ்ப்பாணப் பொலிஸ்தானத்தில் எல்லாரும் கிரமமாக விருப்பதைக் காண்கிறேன்; இந்த ஸ்தானம் 1866-ம் ஆண்டிலே ஸ்தாபிக்கப்பட்டதாதலின் இது பழைய பொலிஸ்தானங்களுள் ஒன்றாகும். 1904-ம் ஆண்டில் நான் இந்தத் தானத்திற் பொலிஸ் தலைவராகக் கடமை பார்த்துள்ளேன்; யாழ்ப்பாணம் காலகதியிற் பெரிய விசேஷமான ஊராகவுமாதலின் இன்னமும் பல பொலிஸ் தானங்கள் இங்கே தாபிக்கப்படுமென நினைக்கிறேன்'.

நரபலி தப்பியோடி வந்துவிட்டது

கொல்ல முயற்சித்தோர்மீது வழக்கு

கல்முல்லாவைச் சேர்ந்த அறன்கலா என்னுங் கிராமத்தில் போகந்தானை மலைக்குகையொன்றுள் திரவியப்புதையல் இருக்கிறதென நம்பி 15 பேர் அந்த மலையண்டைபோய்ச் சேர்ந்தனர். குகையுட் கொஞ்ச இடத்தைத் தோண்டியபின், தம்முடன் வந்தவர்களுள் ஒருவனை, திரவியம் இருக்கிறதோ எனக் கேட்டு அக்கிடங்குள் இறங்கச்சொல்ல அவன் இறங்கினான். அவனைப் பலியாகக் கொடுப்பதற்கு அந்தரங்கமாக நிச்சயித்துக்கொண்ட 14 பேரும் அவன் இறங்கிய உடனே பெரிய ஒரு கல்லை உருட்டிக்கொண்டுவந்து அக்கிடங்கின் வாயில் வைத்து மூடிவிட்டனர். அவர்கள் செயலிற் சந்தேகங்கொண்ட அந்த இறங்கியவன் மேலே வந்து மூடியகல்லின் ஒருபக்கத்திலே சிறிது வெளியிருப்பக்கண்டு ஒருவாறு தலையை நீட்டி உடம்பினால் நகர்த்து வெளியே வருதலும், அப்பாதகர் பதினாலுபேரும் ஓட்டம் பிடித்தனர். நகரும்போது அவனுடைய முகத்தில் ஒருபக்கம் ஒரு காது ஒருகை ஒருகால் என்னுமிவைகள் உராஞ்சுண்டு இரத்தம் பெருகலாயின. அவன் குறித்த 14 பேருக்கும் விரோதமாக வழக்குத் தொடர்ந்திருக்கிறான்.

முஸோலினியின் ராஜினமா

3 இலாகாத் தலைமையை விட்டு விலகினர்.

ரோம்; ஜூன் 10—

முஸோலினியின் மருகரான ஸியானோ பிரபு இத்தாலிய வெளிநாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார். நான்குவருஷகாலம் உதவி மந்திரியாக விருந்த சீனோர் சுவிச்சைப்பாராட்டி முஸோலினி கடிதமெழுதியிருக்கிறார். இதுவரையில் முஸோலினி ஏழு இலாக்காக்களையுந் தம் வசம் வைத்திருந்தார். அவ்ற்றில் மூன்று இலாக்கா தலைமையை அவர் இப்போது ராஜிநாமாச் செய்துவிட்டார். நான்கு முக்கிய இலாக்காக்கள் மாத்திரம் அவர் வசமிருக்கின்றன. உள்நாட்டு யுத்த கடற்படை, விமானப்படை, இலாக்காக்கள் அவர் வசமிருக்கும். இதனால் சைநியங்களுக்கும் அவருக்குமே இனி விசேஷ தொடர்பிருக்கும்.

சீனோர் வெஸ்லோனு காலனி மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

றெயிலில் தனியான சாப்பாட்டு வண்டி

சோறு கறி கொடுக்கப்படுமாம்

கொழும்பு ஜூன் 12

பிரயாணிகளுக்குரிய ரயில்களில் உள்ள சாப்பாட்டு வண்டியில் இனிச் சோறு கறி இலங்கைச் சாராயம் முதலியவைகளும் கிடைக்கும். இந்த ஏற்பாடுகள் ஜூலைமாதம் 1ம் தேதியிலிருந்து நியதியாகச் செய்யப்படும். இப்போது ரயில் ஆகாரவண்டிகளில் சாப்பாடு சப்ளைசெய்துவரும் கம்பெனிக்கும் ரயில்வே இலாகாவுக்கும் உள்ள ஒப்பந்தம் இம்மாதம் 30-ந் தேதியோடு முடிவாகிறது. இப்போது ரயில்வே இலாக்கா புதிய ஒரு மனிதருடன் புது ஒப்பந்தம் (3 வருடத்திற்கு) செய்துகொண்டிருக்கின்றது. புதிய அம்மனிதர் இலங்கை மலாயா முதலிய இடங்களில் ஹோட்டல் நடத்தி நல்ல தேர்ச்சிபெற்றவராம்.

சோறு கறி முதலிய சாப்பாட்டுகள் இப்பொழுது ஐரோப்பிய ஆகாரம் கொடுக்கப்படுவதுபோலக்கொடுக்கப்படமாட்டா. ஐரோப்பிய ஆகாரம் கொடுக்கப்படும் வண்டியில் சோறு கறி பரிமாறப்படவுமாட்டா. அதற்கெனத் தனியான ஒருவண்டி பிரயாணி ரயில்களுடன் இனிச் சேர்க்கப்படும். முதல் முதல் யாழ்ப்பாணம் திரிகோணமலை லயனிலும் மாத்தறை லயனிலும் புதிய ஆகார வண்டிகள் அடுத்த மாதத்தில் பிரயாணி ரயில்களில் சேர்க்கப்படுமென அறியப்படுகிறது.

அடிஸ் அபாபா பிரபு

படாக்ளியோவுக்குப் பட்டம்

லண்டன் ஜூலை 12—

மார்ஷல் படாக்ளியோ அடிஸ் அபாபா பிரபு என்ற பட்டமளிக்கப் பெற்றிருக்கிறார். அவர் இராணுவ இலாக்கா நிர்வாகத் தலைமையை ஏற்றுக்கொள்ளுகிறார். ஆதலால் மார்ஷல் கிரேஸியானி அபிஸீனிய ராஜப்பிரதிநிதியாகிறார்.

மார்ஷல் படாக்ளியோ இத்தாலிக்கு அழைக்கப்பட்டபோது இனியவர் வைசிராயாக அபிஸீனியாவுக்குத் திரும்பமாட்டாரென்று கூறப்பட்டது. இச் செய்தியை இத்தாலிய அதிகாரிகள் அப்போது மறுத்தனர்.

சீனுவில் உள்நாட்டுச் சண்டை

ஷாங்கை, ஜூன் 15

சீனுவில் உள்நாட்டு சண்டை ஏற்பட்டுவிடுமென பயப்படுகிறது. ஹூனன் பிரதேசத்தின் தெற்கு பகுதியில் சீன சர்க்கார் படைகள் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. இவ்விடத்தில் சர்க்கார் படைகளுக்கும் குவாங்ஸிப் படைக்கும் சண்டை நடக்குமென்றும் நம்பப்படுகிறது.

ஜெர்மனியின் ஆயுத விருத்தி

படைகள் தயாரிப்பதில் பரபரப்பு

இராணுவ இரகசியங்களைத் தெரிவிப்போர்க்கு மரணதண்டனை

ஐரோப்பா முழுவதும் போர்க்களமாக மாறிவிடுமோ?

லண்டன், ஜூன் 14

சமீபத்தில் பிரக்கியாதி வாய்ந்த ஜெர்மன் பத்திரிகாசிரியராகிய ஹெர் ஆல்பர்ட் மூல்லர் லண்டனுக்கு விஜயம் செய்தார். அவர் ஜெர்மனியைப்பற்றிக் கீழ்க்கண்ட பரபரப்பான விஷயங்களை வெளியிட்டார்:—

ஹிட்லரின் சர்க்கார் ஜெர்மனியைத் துரிதமாக மற்றோர் யுத்தத்திற்குத் தயாராக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மனியின் ஆயுதத் தொழிற்சாலைகள் ஏராளமான யுத்த விமானங்களையும் யுத்தக் கப்பல்களையும் நீர் மூழ்கிக் கப்பல்களையும் நச்ச புகை வகைகளையும் உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றன. இப்பொழுது ஜெர்மனி முழுவதுமே ஓர் ஆயுதத் தொழிற்சாலையைக் காட்சி கொடுக்கிறது.

ஜெர்மன் சர்க்கார் ராணுவ ரகசியங்களை வெளியிடுபவர்களுக்கு மரணதண்டனை விதிக்கின்றார்கள். ஜெர்மன் ஏகாதிபத்தியத்தை மீண்டும் ஸ்தாபனம் செய்யும் பொருட்டு விரைவில் ஜெர்மனியர்கள் ஐரோப்பா முழுவதையும் தங்களுடைய போர்க்களமாக மாற்றி விடுவார்கள்

“ஜெர்மனி பலமாக யுத்த முஸ்தீபுகளைச் செய்து வருகின்றது. ஜெர்மனியில் நடைபெற்றுவரும் ரகசியமான வேலைகள் உலகத்திற்குத் தெரியாது. கூடிய சீக்கிரம் உலகம் முழுவதையுமே எதிர்த்துப் போராடுவதற்கு ஜெர்மனி தயாராகிவிடும்’ என்று சமீபத்தில் பிரிட்டனுக்கு விஜயஞ்செய்த பிரக்கியாதிவாய்ந்த ஜெர்மன் பத்திரிகைக் காரராகிய ஹெர் ஆல்பர்ட் முல்லர் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார். இவ்விஷயங்கள் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணின; ஜெர்மனி அடுத்த மகா யுத்தத்திற்கு எவ்வாறு தயாராக்கிக் கொண்டு வருகிறதென்பதை ஹெர் ஆல்பர்ட் முல்லர் நன்கு விளக்கினார்.

ஜெர்மனியின் பலமான யுத்த முஸ்தீபுகள்

ஹிட்லரின் சர்க்கார் ஜெர்மனியை மிகவும் துரிதமாக யுத்தத்திற்குத் தயாராக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமான ரகசியங்களை வெளியிடும் ஜெர்மனியர்கள் ஆயுள் வரை சிறைவாசம் மரணதண்டனை முதலியவற்றிற்கு உள்ளாவார்கள். ஆகவே அவர்கள் மூச்சு விடுவதில் கூடச் சாக்கிரதையாகஇருக்கவேண்டும். டாங்கிகள், யுத்த விமானங்கள் நச்சுப் புகை முதலியவை பரம ரகசியமாக வைத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆயுதத் தொழிற்சாலைகளில் ‘மௌன விரதச் சட்டம்'' மிகவும் கடுமையாக அமுல் நடத்தப்படுகிறது. விஞ்ஞான ஆராய்ச்சி மண்டபங்களிலும் ஆயுதத் தொழிற்சாலைகளிலும் ஹிட்லர் சர்க்கார்மீது மிகுந்த நம்பிக்கை உள்ளவர்களே வேலைக்கு வைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். ரகசியத்தை வெளியிட முயற்சி செய்தவர்களும் கட்டுப்பாடுகளை மீறுபவர்களும் அந்த இடத்தில் வைத்தே சுட்டுக் கொல்லப் படுவார்கள்; இது மிகவும் சாதாரண சம்பவமாகும். 1935 ம் வருடத்தில் ராணுவ ரகசியங்களை வெளியிட்ட குற்றத்திற்காக 9 பேர் மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

கடற்படை ஒப்பந்தம் மீறப்பட்டது.

1935ம் வருடம் ஜூன் மாதத்தில் லண்டனில் வைத்துப் பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்குமிடையே கடற்படை ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தப் பிரகாரம் ஜெர்மனி பிரிட்டனுடைய கடற்படையில் 100 க்கு 35 வீதந்தான் வைத்துக் கொள்ளலாம். அதாவது 42 லட்சம் டன் நிறைக்கு அதிகமாக ஜெர்மனி யுத்தக் கப்பல்களை வைத்துக் கொள்ளக் கூடாது. இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் சமயத்திலேயே ஜெர்மனி வெர்ஸயில்ஸ் ஒப்பந்தத்தை மீறிக் கடற்படையைப் பெருக்கியிருந்தது. ஜெர்மனி யுத்தக் கப்பல்களையும் குரூஸர்களையும் அதிகமாகக் கட்டிக் கொண்டது நீர்மூழ்கிக் கப்பல்களையும் யுத்த விமானங்களைச் சுமந்து செல்லும் கப்பல்களையும் ஜெர்மனி வைத்துக் கொள்ளக் கூடாதென்று வெர்ஸெயில்ஸ் ஒப்பந்தம் தடைசெய்திருந்தது. ஆனால் இத்தடையை ஜெர்மனி சிறிதும் லட்சியம் செய்யவில்லை.

ஜெர்மன் ராணுவம்

ஜெர்மனியின் ராணுவம் இப்பொழுது மிகவும் பலமுள்ளதாகவும் திறமையாகவும் இருக்கிறது. இந்த ராணுவத்திற்குத் தற்கால சாதனங்கள் யாவும் கிடைத்திருக்கின்றன. திடீரென்று எந்தத் திசையில் வேண்டுமானாலும் ஜெர்மனி படையெடுத்துச் செல்லலாம். ஜெர்மனியின் ராணுவம் முழுவதும் மோட்டார் மயமாக்கப்பட்டிருக்கிறது. மோட்டார், விமானங்கள், ரப்பர் முதலிய தொழிற்சாலைகள் யாவும் ஜெர்மன் சர்க்காரின் உதவியுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன மோட்டார் தொழிற்சாலைகள் மிகவும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. யுத்தகாலத்தில் இத்தொழிற்சாலைகள் லட்சக்கணக்கான மோட்டார்களைக் கண் மூடித் திறப்பதற்குள் உற்பத்திசெய்துவிடும்.

ஆயுதம் தரித்த மோட்டார் படையொன்றை ஜெர்மன் அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இதுமாதிரியான பெரிய படை உலகின் எப்பகுதியிலும் ஏற்படுத்தப்படவில்லை, யுத்தகாலத்தில் உபயோகப்படுத்தக் கூடியதாக இப்பொழுது ஜெர்மனியில் 10 லட்சம் மோட்டார் ஸைக்கிள்கள் இருக்கின்றன இவற்றின் சொந்தக்காரர்களில் 100-க்கு 80 பேர் மோட்டார் ஸைக்கிள் துப்பாக்கி வீரர்களாகப் பயிற்சி பெற்றிருக்கின்றார்கள்.

மூலப் பொருள்கள்

அந்நிய நாடுகளிருந்து மூலப் பொருட்களைத் தருவிக்காமலிருப்பதற்கு ஜெர்மன் சர்க்கார் மிகவும் தீவிரமாக உழைத்துவருகின்றார்கள். பெட்ரோல் எண்ணெய்வகைகளை ஜெர்மன் நிலக்கரியிலிருந்து உற்பத்தி செய்வதற்குத் தொழிற்சாலைகள் ஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கின்றன. மூன்று பெரிய நிலக்கரித் தொழிற்சாலைகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. சுண்ணாம்பிலிருந்தும் நிலக்கரியிலிருந்தும் செயற்கை ரப்பர் செய்ய ஜெர்மன் சர்க்கார் முயற்சித்துவருகின்றார்கள். பெட்ரோல் செலவில்லாமலேயே மோட்டார்களை ஓட்டுவதற்கு மாவாயு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ரோடுகளின் அழகான அமைப்பு

யுத்தத்திற்கு வசதியாக ஹிட்லர் சர்க்கார் ரோட்டுப் போக்குவரத்துகளைப் பெரிதும் அபிவிருத்தி செய்திருக்கின்றார்கள். 700 கோடி மார்க் செலவில் ராணுவ ரோட்டுகள் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ரோட்டுவழியாக ஜெர்மன் படைகள் துரிதமாக எந்தத் திசைக்கு வேண்டுமானாலும் செல்லலாம். இந்த ரோட்டுகளில் மற்ற வாகனங்கள் செல்ல முடியாது. மேற்கூறிய ரோட்டுகளில் இரு லொறிகள் ஒரே சமயத்தில் எந்தத் திக்கில் வேண்டுமானாலும் மணியொன்றுக்கு 60 மைல் வேகத்தில் செல்லலாம்.

சமாதானத்திற்கு ஆபத்து.

ஹிட்லர் ஜெர்மனியின் குறைகளைச் சமரஸப் பேச்சுகள் மூலமாகத் தீர்த்துக்கொள்ள முடியாதென்பதை நன்கு அறிவார். படையின் பலத்தைக்கொண்டு தான் அவர் குறைகளைத் தீர்த்து வருகின்றார் சமீபத்தில் ரைன்லந்தைப் பலாத்காரமாகக் கைப்பற்றிக்கொண்டார். பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய நாடுகள் கூக்குரல் போடுபவர்கள் கோழைகளென்பதே ஹிட்லரின் சித்தாந்தம். குடியேற்ற நாட்டுப் பிரச்னை ஹிட்லரின் கவனத்தை இப்பொழுது ஈர்த்திருக்கின்றது ஹிட்லர் ஜெர்மனியின் பழைய குடியேற்ற நாடுகளைப் பலாத்காரமாகக் கைப்பற்றுவாரா? அல்லது அவற்றைத் திருப்பிக்கொடுக்குமாறு நயமாகக் கேட்டுக்கொள்வாரா? என்பது இனித்தான் தெரியவேண்டும்.

மாஜி-அபிஸீனிய சக்கரவர்த்தி

சர்வதேசசங்க யூனியனில் விருந்து

லண்டன், ஜூன் 11

சர்வதேசசங்க யூனியனின் ஆதரவில் நடைபெற்ற விருந்துக்கு மாஜி அபிஸீனியச் சக்கரவர்த்தி விஜயம் செய்திருந்தார். அவருடன் அவருடைய பட்டத்திளவரசரும் புதல்வியாகிய ஷாஹைற இளவரசியும் வந்திருந்தார்கள ஷாஹைற இளவரசி அம்ஹாரிக் பாஷையில் பேசினாள் நீகஸ் பின்வருமாறு பேசினார்:-

அபிஸீனியாவின் பல மாகாணங்களில் ஜனங்கள் இத்தாலியர்களுக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள் எத்தியோப்பியாவின் மேற்குத் திக்கில் மூன்றாவது பகுதி பழைய அதிகாரிகளாலேயே ஆட்சிசெய்யப்பட்டு வருகின்றது. இன்னும் எனக்குச் சர்வதேச சங்கத்தின்மீது நம்பிக்கையிருக்கிறது

புரொபஸர் கில்பர்ட் முரே விருந்துக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அவர் தம்முடைய தலைமைப் பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது:- முசோலினி அபிசீனியா மீது கொண்ட வெற்றிக்காக ஆடம்பரமாகச் சந்தோஷம் கொண்டாடியும் அவரால் உலக அபிப்பிராயத்தை அடக்கமுடியாது அவர் இழைத்த கொடுமைகளை உலகம் பலமாகக் கண்டனம் செய்கின்றது.

விளம்பரம்.

ஸ்ரீ சோமாஸ்கந்த வித்தியாலயம்
(தமிழ்) புத்தூர்.

தேவை

ஒரு பயிற்சி பெற்ற தலைமைத் தமிழ் ஆசிரியர் (ஆண்)
ஒரு பயிற்சி பெற்ற உதவித் தமிழ் ஆசிரியர் (ஆண்)
ஒரு பயிற்சி பெற்ற உதவித் தமிழ் ஆசிரியர் (பெண்)
மூன்று பயிற்சிபெறாத அநுபவமுள்ள தமிழ் ஆசிரியர்கள்

1936 ம் ஆ ஆனி மீ 30 ம் திகதிக்கு முன் ஸ்ரீ சோமாஸ்கந்த வித்தியாலய சங்கத்தின் காரியதரிசிக்கு, விரும்பினோர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விசேஷ தாரதரங்களையும் இப்போது என்ன சம்பளம் பெறுவதென்பதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

இப் பள்ளிக்கூடத்தில் J. S. C. வகுப்பு முடிய வகுப்புகள் வைத்திருக்கப் பட்டிருக்கிறது. அரசினர் உதவிப்பணம் பெறுவதற்காய்ப் பதியப்பெற்றிருப்பது.

புத்தூர் க. மு. செல்லப்பா
17 - 6 - 36 காரியதரிசி.

Mis. 58. 18-6-36.

கோட்டுச் செய்திகள்

நமது நிருபர்.

“நான் செபமாலையோடு முழந்தாளில் நின்று செபஞ் செய்தேன்”

தெய்வ வழிபாட்டைக் குழப்பியதாக வழக்கு.

மல்லாகம் பொலிஸ்கோட்டில் மாதகலில் வசிக்கும் அந்தோனிப்பிள்ளை கைம்பெண்-பிரகாசியம்மாவை தேவவழிபாட்டிலிருந்து குழப்பியதாகவும் ஓர் இரும்பாயுதத்தால் அடித்ததாகவும் குற்றஞ்சாட்டி அவ்வூர் (1) பிலிப்பாத்தை (2) சிவபாக்கியம் (3) விறிசித்தம்மா ஆகிய மூவர்மீது தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக திரு. T. C. இராசரெத்தினமும் எதிரி சார்பாக H. R அரியகுட்டியும் திரு. பிலிப்பும் வாதித்தனர்.

அந்தோனிப்பிள்ளை கைம்பெண் கூறியதாவது:—

சென்ற 29 - 3 - 36ல் 5½மணியளவில்நான் தேவாலயத்திலிருந்தேன். பூசை நடந்துகொண்டிருந்தது. எனது பேத்தி லூர்த்தம்மாவுக்குச் சிவபாக்கியம் ஓர் சாவியால் அடித்தாள், நான் “ஏன் அவளுக்கு அடிக்கிறாய்” என்றுகேட்டேன். அப்போது எனக்கும் அடி விழுந்ததும் 1-ம் எதிரி எனக்கு இடித்தாள். 2-ம் எதிரி ஓர் இரும்பாணியால் அடித்தாள். 3-ம் எதிரி எனக்கொன்றுஞ் செய்யவில்லை. நான் மயங்கிவிட்டேன். எனக்கு அதன் பின் ஒன்றுந்தெரியாது. இவையெல்லாம் நடக்கும்போது நான் தேவாராதனையில் முழந்தாளில் நின்று செபமாலையுடன் செபஞ்செய்துகொண்டிருந்தேன். நான் ஆஸ்பத்திரியில் 22 நாள் இருந்தேன். 2ம் எதிரி காயமுண்டாக்கியதற்குக் குற்றஞ்சாட்டப்பட்டாள். சிவபாக்கியம் 2-ம் எதிரி- தான் குற்றவாளியல்லவென்று கூறினாள். 100ரூபா பிணையில் விடப்பட்டாள். வழக்கு வருகிற 17-ந் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

அபின் வைத்திருந்தோருக்கு 500 ரூபா அபராதம்

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் நீதிபதி முகதாவில் சுன்னாகத்தில் வசிக்கும் அப்புக்குட்டி என்பவன் சென்ற வைகாசிமாதம் 17ந் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் றெயிலில் கையில் ஒரு றாத்தல் அபினும் றெயில் பெட்டியுள் வேறுபக்கத்தில் ஒரு இறாத்தல் அபினும் வைத்திருக்கக் கண்டு மதுப்பரிசோதகர் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தார். எதிரி தான் குற்றவாளியென ஒப்புக்கொண்டமையால் நீதிபதி எதிரிக்கு 500 ரூபா அபராதம் விதித்தார்.

கல்லால் எறிந்து கத்தியால் வெட்டியதாக வழக்கு

அடுத்தமீ 27ந் திகதிக்குத்தவணை

மல்லாகம் பொலிஸ் கோட்டில் 1 K சின்னத்துரை 2 A கந்தப்பொடி 3 K. வீரசிங்கம் 4 K. சின்னையா என்னும் நால்வரும் சென்ற 10-ம் திகதி அவ்வூர் இளையவனையும் கந்தையா பெண் சிவகாமியையும் கத்தியாலும் கல்லாலும் காயப்படுத்தியதாக அவ்வூர் விதானையார் வழக்குத் தொடர்ந்தார்.

கந்தையாபெண் சிவகாமி சாட்சியம் கூறியதாவது:-

சென்ற 10ம் திகதி வீரசிங்கமும் சின்னையாவும் க இளையவர் என்பவரைக் கட்டிப்பிடித்துப்புரண்டனர். சின்னத்துரை இளையவருக்கு ஓ கல்லால் காலில்எறிந்தான. உடனே இளையவர் நிலத்தில் விழுந்துவிட்டார். நான் இதைக் கண்டதும் “ஏன் கல்லால் எறிந்தாய்” என்று கேட்டபோது சின்னத்துரை ஒரு கத்தியால் என்னை வெட்டினார். 1ம் எதிரி கடுங்காயமுண்டாக்கியதாகவும் மற்றவர்கள் சின்னத்துரைக்கு உதவி புரிந்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டனர். எதிரிகள் எல்லோரும் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று கூறினார்கள். வழக்கு வருகிற 27-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

சீட்டாடிய அறுவர்க்கு அபராதம்

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் ஆஸ்பத்திரிறோட்டில் (1) ஜேமிஸ் (2) மாட்டின் (3) சிங்கலம் (4) டாசித் அப்பு (5) ஜெயசேன (6) மாட்டின் ஆகிய அறுவர் சூதாடியதாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டனர். எதிரிகள் குற்றவாளிகளென ஒப்புக்கொண்டமையால் நீதிபதி எதிரிகளுக்குத் தனித்தனி 10 ரூபா அபராதம் விதித்தார்.

வாய்ச்சண்டை கைச்சண்டையாக மாறியது.

சென்ற 15-6-36 திங்கட்கிழமை மல்லாகம் பொலிஸ் கோட்டில் புன்னாலைக் கட்டுவனில் வசிக்கும் (1) மயிலனும் (2) தம்பர் பெண் இராசம்மாவும் அவ்வூர் வயிரவன் பெண் சீதேவிக்கு ஓர் கத்தியாலும் பொல்லாலும் காயப்படுத்தியதாகக் குற்றஞ் சாட்டிப் புன்னாலைக் கட்டுவன் விதானையார் ஒரு வழக்குத் தொடர்ந்தார்.

இவ்வழக்கில், சீதேவிகூறிய சாட்சியமாவது:—

நான் எனது மைத்துனருடைய தோட்டத்தில் சென்ற 18ம் திகதி வேலை செய்துகொண்டு நின்றேன்; நிற்கும்போது 2ம் எதிரி அங்கே வந்து என்னை ஏசினாள். நானும் அவளை ஏசினேன். மயிலன் இதற்கிடையில் ஓர் கத்தியுடன் வந்து எனது மயிரைப் பிடித்துக்கொண்டு நிற்கும்போது இராசம்மா ஓர் பொல்லைக் கொண்டுவந்து எனக்கு அடித்தாள். நான் அப்பொல்லைப் பறிக்க எத்தனித்தேன். மயிலன் தான் வைத்திருந்த கத்தியால் எனது கையில் வெட்டினான்.

எதிரிகள் தாம் குற்றவாளிகள் அல்ல என்று கூறினர். எதிரிகள் தனித்தனி 100ரூபா பிணையில் விடப்பட்டனர்.

வழக்கு வருகிற ஆடி 20ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பொன்னியைக் காரில் தூக்கிச் சென்றார்களாம்

போலிஸ்கோட்டில் வழக்கு.

மட்டுவிலில் வசிக்கும் சின்னவன் பெண் சின்னாச்சி தனது மகள் பொன்னி என்பவளை (15-6 36) திங்கட்கிழமை மட்டுவில் பண்டிததலைச்சி அம்மன்கோவிலுக்கு அனுப்புவதற்காக, அடுத்த வீட்டு நகைகளை இரவலாக வாங்கிக்கொடுத்து அவளை அவளுடைய தமையனோடு அனுப்பிவைத்தாள். அவள் கோவிலுக்குப் போய் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது கலட்டியில் வசிக்கும் சின்னப்பொடியன் நாகனும கந்தையனுமாக அவளை வழியில் நின்று ஓர் காரில் தூக்கிப்போட்டுக் கொண்டு போனதாக அவர்கள்மீது குற்றஞ் சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் வழக்குத்தொடரப்பட்டது.

இவ்வழக்கில் சின்னாச்சி கூறியதாவது:—

“எனக்குப் பொன்னி என்று ஒரு மகளுண்டு. அவள் என்னுடன் தான் இருந்தாள். இச்சம்பவத்தன்று நான் எனது மகளுக்கு 350 ரூபா பெறுமதியுள்ள இரவல் நகைகள் வாங்கிக் கொடுத்தேன். அவள் அவளுடைய சகோதரன் அப்பையாவுடன பண்டிததலைச்சி அம்மன் கோவிலுக்குச் சென்றாள். அவள் வீட்டுக்குத் திரும்பி வரும்போது மேற்சொன்ன எதிரிகள் வேறு இருவருடைய உதவியைக்கொண்டு அந்த நகைகளுடன் ஓர் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு சென்றார்கள். அவளுக்கு இப்போது இருபது வயது.” நீதிபதி வழக்கைப் பொலிசாரின் விசாரணைக்கு அனுப்பியிருக்கிறார்.

மிஸ்ரர் ஜி. கே. செஸ்டர்டன் மரணம்

சிறந்த ஆங்கில நூலாசிரியர்

லண்டன், ஜூன், 14

பிரபல மேல்நாட்டு பத்திராசிரியரான திரு. ஜி. கே. செஸ்டர்டன் இன்று பேக்கண்ஸ்பீல்டிலுள்ள அவருடைய நாட்டுப்புற வீட்டில் காலமானார்.

திரு. செஸ்டர்டன் கி. பி. 1874ம் வருடம் பிறந்தார் அவர் தற்கால மேல்நாட்டு நூலாசிரியர்களில் ஓர் பிரபலஸ்தராக விளங்கினார். அநேக பத்திரிகைத் தொழிலிலும் அவர் சிறந்த பாண்டித்தியம் பெற்றிருந்தார். அவர் "இல்லஸ்ட்ரேட்டட் லண்டன் நியூஸ்" என்னும் பத்திரிகைக்கு வாரந்தோறும் வழக்கமாகக் கட்டுரைகள் வரைந்துகொண்டு வந்தார். அவர் பல முக்கியமான தேசிய அரசியல் பிரச்னைகளைப்பற்றி அவ்வப்போது மிகவும் ருசிகரமான கட்டுரைகள் வரைவது வழக்கம். அதேபோன்ற பொதுஜன அறிவு முதிர்ச்சிக்கான அரியபல விஷயங்களையும்பற்றி ஆராய்ச்சி முறையில் கட்டுரைகள் வரைவதிலும் தான் திரு. செஸ்டர்டன் மிகவும் தேர்ச்சி பெற்றவர்

விபசாரத்தடை

இங்கிலாந்து ஸ்திரீ நியமனம்

உதகமண்டலம், ஜூன் 12—

விபசாரத்தடை சம்பந்தமாகச் சென்னை உஷார் சங்கத்தின்கீழ் வேலைசெய்ய இங்கிலாந்திலிருந்து ஒரு ஸ்திரீ சமூக ஊழியரைச் சென்னை கவர்ன்மெண்டார் பொறுக்கி நியமித்திருக்கின்றனர் இவர் பெயர் மிஸ் மக்கென்ஸி. செப்டெம் மாதம் இவர் சென்னைக்கு வந்து சேருவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போதைக்கு இவர் ஒரு வருஷத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருடைய சம்பளம், படி முதலியவை சென்னை கவர்ன்மெண்டால் கொடுக்கப்படும். முன்பே சென்னை உஷார்சங்கத்தின் வேண்டுகோளின் பேரில் கவர்ன்மெண்டார் வரவுசெலவு திட்டத்தில் இதற்கேற்பாடு செய்திருக்கின்றனர்.

ஜவஹர்லால் அறிக்கை

காங்கிரஸ் காரியக்கமிட்டியில் பிளவு இல்லை

பண்டித ஜவஹர்லால் நேரு, தம் மீது புகார் கூறும் பலருக்கும் பதில் கூறி ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் பிளவு இல்லையென்றும், தாம் பொதுவாக அபேதவாதத்தை ஆதரித்தபோதிலும் இப்போது அதைப் பிரசாரம் செய்யவில்லையென்றும், தேச சுயேச்சைக்காகவே பாடுபட்டுவருவதாயும், பம்பாய் வர்த்தகப் பிரமுகர்கள் தம்மீது ஆத்திரங்கொள்ளுவது ஆதாரமற்றதென்றும் அவர் அதில் வெளியிட்டிருக்கிறார்.

கொழும்பில் 'விலோன்'

கொழும்பு ஜூன் 15.

சென்னையிலிருக்கும் போது ஸ்விடன் தேசத்து "விலோன்" என்னும் கப்பலில் தீப்பிடித்துவிட்டதால் அது சென்னையில் அதிக நாட்கள் தாமதிக்க வேண்டியதாயிற்று பல நாள்களுக்குப்பின் அக்கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு வந்துசேர்ந்தது. பகுலிப் பட்டணத்தை விட்டு மேற்படி கப்பல் போனமாதம் சென்னைக்கு வரும்போதுதான் தீ பற்றிக்கொண்டது அக்கப்பல் தீயை அணைக்கச்சென்னை நெருப்பணைக்கும் படையினர் பலத்த முயற்சிகள் எடுத்துக்கொண்டார்கள்.

பாலஸ்தீன நிலைமை

துருப்புகள் எதிர்செல்லும் ரயில் வண்டிகளைக் கவிழ்ப்பதே இப்போது பாலஸ்தீனக் கலகக்காரர் உத்தேசமாக விருந்துவருகிறது. துல்கேரம் என்னுமிடத்தில் ஒரு ரயில் லயனை விட்டிறங்கியது. கலகக்காரர் லயனையே அறுத்துவிடுகிறார்கள். அதிகாரிகள் டாங்கிகளுடன் சைந்நியத்தைச் சம்பவம் நடந்தவிடத்திற்கு அனுப்பிவருகின்றனர்.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் வட்டு மேற்கு வட்டுக்கோட்டை க. செ. இராசதுரை எனபவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின்விபரம்:—

நம்.	உ.	ரூ.	ச.	பெயர்.	ஊர்	நகைகளின் விபரம்
1933-ம் ஆ 6-ம் மீ						
141	1	7	00	ச. ஆறுமுகம்பிள்ளை	வட்டுமேற்கு	அச்சரக்கூடு 1
1934-ம் ஆண்டு 3-ம் மீ						
277	25	15	00	இ. தர்மராசா	,, ,,	அச்சரக்கூடு 1
5-ம் மீ						
372	15	10	00	ச. வேலன்	,, ,,	வாளி ஒருசோடி
393	21	6	00	புன்னன் மயிலன்	,, ,,	முறிச் மோதிரம் 1
8-ம் மீ						
581	19	20	00	கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்	,, ,,	கிறாச் 1 வாளிசோடி]
9-ம் மீ						
620	1	8	00	வயிரவன் வயித்தியன்	,, ,,	காதோலை ஒருசோடி
641	9	10	00	வயிரவன் வயித்தியன்	,, ,,	காதோலை ஒருசோடி
655	14	6	00	வயிரவன் வயித்தியன்	,, ,,	காதில் பூ ஒருசோடி
663	17	100	00	வீரசிங்கம் நடராசா	,, ,,	செட்டிக்காப்பு சோடி1
678	25	10	00	சின்னக்குட்டி முருகேசு	,, ,,	காதோலை ஒருசோடி
10-ம் மீ						
724	17	35	00	செல்லப்பா நாகலிங்கம்	,, ,,	சிறுபிள்ளைக்காப்புசோடி 1
735	22	7	00	வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை	,, ,,	காதோலை ஒருசோடி
11-ம் மீ						
757	4	8	00	வயிரவன் வயித்தியன்	,, ,,	காதில் பூ ஒருசோடி
822	23	7	00	கா. கந்தையா	,, ,,	காதோலை ஒருசோடி
12-ம் மீ						
838	4	30	00	அ. கணபதிப்பிள்ளை	,, ,,	காதோலை ஒருசோடி
848	9	14	00	கா. மார்க்கண்டன்	,, ,,	அச்சரக்கூடு ஒன்று
875	26	6	00	கா. சின்னப்பொடியன்	,, ,,	தாலி ஒன்று
890	31	14	76	ச. பாதி	,, ,,	மணிஅட்டியல் ஒன்று
1935ம் ஆ 1ம் மீ						
908	12	12	00	க வேலுப்பிள்ளை	,,	தாலி ஒன்று
2ம் மீ						
985	6	10	00	கி இராமு	,,	காதோலை 1 சோடி
1016	19	25	00	க சுப்பிரமணியம்	,,	காதுக்குச்சி1சோடி, குண்டுச் [சங்கிலி1
3ம் மீ						
1062	15	40	00	கா கந்தையா	,,	அரைத்தங்கப்பவுணுடன் குண்டுச் சங்கிலி ஒன்று
1066	16	80	00	வே முதலையா	,,	பட்டந்தீர்ந்த காப்பு ஒருசோடி
1075	21	10	00	க முருகுப்பிள்ளை	,,	குவளைக்கடுக்கன் ஒருசோடி
5ம் மீ						
1255	29	25	00	கா மாரிமுத்து	,,	கிறாச் ஒன்று
6ம் மீ						
1267	3	60	00	கி விஞசித்தம்பி	,,	முகப்புடன் பட்டந்தீர்ந்த காப்பு 1சோடி

விற்பனவு: தாதுவ ஆனிமீ 32ந் திகதி (15-7-36) புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்டாகை பிறகலாக மிகுதி மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

N. P. APPER,
Auctioneer.

(Mis. 56. 18 & 22-6-36)

அந்தமான் தீவின் அந்தரங்க உண்மை

இந்தியா சட்டசபை அங்கத்தவர் அறிக்கை

கரன்ஸி நோட்டுப்போலப் பெண்கள் கைமாறப்படும் கற்பிழந்த நிலைமை.

லக்ஷ்மணபுரி, ஜூன் 11—

இந்தியா சட்டசபை அங்கத்தினரான ஸ்ரீ மோகனலால் சாக்ஸேனா பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதின் சாரமாவது:—

அந்தமான் சென்று கனம் கிரெய்க் அடைந்த அனுபவத்தைப் பற்றி வெளியிட்டதொரு அறிக்கையை உள்நாட்டு இலாகா ஆதரித்து ஒரு குறிப்புரையைப் பிரசுரித்தது. புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டிச் சாதாரண மனிதர்களின் ஆதரவைத் தேடுவது கவர்ன்மெண்டுக்கு இயற்கையே ஆனால் அந்தப் புள்ளி விவரத்தைச் சற்றுஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்போது உண்மை விளங்கும். இந்திய ஜெயில் கமிஷன் 16 வருஷங்களுக்குமுன் அந்தமானைப் பற்றி வெளியிட்ட நிலைமை இப்போது மாறியிருக்கலாம். ஆனால் அது கைதிகளின் சுவர்க்கமாகாது அங்குள்ளவரின் சுகாதார நிலைமையும் மற்றச்சௌகரியங்களும் மாறினவா என்பதற்குப் பதிலளிக்க வேண்டும். அங்கு ஒழுக்கநிலை சிறப்படையவேயில்லை. முன்னம் நூறு ஆண்பிள்ளைகள் அங்கிருந்தால் சுமார் 14 ஸ்திரீகளிருப்பார்கள். இப்போது அந்த விகிதம் 35 சத விகிதமாக உயர்ந்துவிட்டது. கைதிகளின் குடும்பத்தை அந்தமானுக்கு அழைத்து வரக் கவர்ன்மெண்டார் அளித்த வசதியே இதற்குக் காரணம். ஆனால் இந்தப் புள்ளி விவரத்தைச் சற்று ஆராய்ந்து பார்த்தால் கலியாணமாகாத ஸ்திரீகளின் தொகை 279: விவாகமாகாத புருஷரின் தொகை 8766. இவர்களில் சிலர் மனைவியை இழந்தவர்கள் மற்றும் சிலரின் மனைவியர் சொந்த ஊரிலேயே இருக்கின்றனர். அதிலும் கைதிகளிருக்கும் பாகத்தில் இந்த விகிதாசாரம் இன்னும் கேவலமாக இருக்கிறது.

ஸ்திரீகளின் கற்பு நிலை

எனக்குத் தெரிந்தவரையில் 1923 மார்ச்சில் 6000 புருஷர்களும் 101 ஸ்திரீகளுமிருந்தனர். இப்போது 5900 புருஷரும், 86 ஸ்திரீகளுமிருக்கின்றனர்.

அங்கு கலியாணமான ஸ்திரீகளும வாலிபத்தில் கரன்ஸி நோட்டுக்களைப் போலக் கைமாற வருவதாக ஒரு பத்திரிகையில் எழுதியிருப்பதை நான் வாசித்தேன. நிலைமை இப்படியிருக்கையில் ஒழுக்கத்தைப்பற்றி நான் என்ன சொல்வது?

அந்தமானின் சீதோஷ்ண நிலை கனம் கிரெய்க் சொல்வதைப்போல ரமியமாகவிருந்தால் ஆங்கிலோ இந்தியக் கைதிகளையும் சுவர்க்கம் போன்ற அந்த இடத்துக்கு ஏன் அனுப்பக்கூடாது? கவர்ன்மெண்டார் அந்தமானுக்குக் கைதிகள் அனுப்புவதை நிறுத்தப்போவதில்லை அதற்காக அவர்கள் ஏதோகாரணம் சொல்லி வருகிறார்கள்.

அங்கு சுகாதாரநிலைமையும் வாழ்க்கை நிலையும் சற்றுச் சவுகரியமாகவிருந்தால் அந்தச்செட்டில்மெண்டை ரத்துச்செய்ய வேண்டியதில்லை. ராஜீயக் கைதிகளானாலும் சரி மற்றவர்களானாலும் சரி அவர்கள் விருப்பத்துக்கு மாறாக அவர்களை அந்தமானுக்கு அனுப்பக்கூடாது என்பதே நமது கோரிக்கை. அந்தமானுக்கு ராஜீயக் கைதிகளை அனுப்பி விடுவதால் அவர்கள் அடிக்கடி தங்கள் உறவினரைப் பார்க்க முடிவதில்லை. சாதாரணக் கைதிகளுக்கிருக்கும் சுதந்திரமும் அங்குள்ள ராஜீய கைதிகளுக்கில்லை. சிறைச்சாலைக்கு வெளியில் உலாவும் இவர்களை அனுமதிப்பதில்லை. பாட்மிண்டன் முதலிய ஆட்டங்கள் ஆடலாமெனச் சொல்லப் பட்டாலும் அவர்களைச் சீக்கிரமாக அறையில் அடைத்துவிடுவதால் அவர்கள் ஆடுவதற்கும் நேரம் கிடைப்பதில்லை. மற்ற இந்திய சிறைச்சாலைகளைவிட அங்குள்ளவர்களின் நிலைமை நன்றாக இருப்பதாகச் சொல்வது கூடாது.

ஜீவப் பர சாகரன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழவி, ஆரையடா பூதம் என்றாய்? நீ கொப்பனுடைய பிள்ளையல்ல.

பரம்: பின்னை எணை, கொம்மாட பிள்ளையா?

இதற்கிடையில் சாகரனின் தந்தை வேலையினின்றும் வந்ததைக் கண்ணுற்ற கிழவி, "அடே தம்பி! இங்கே வாடா, உங்கே உன்றைமோன் ஆரையோ கூட்டிவந்து வைச்சுக்கொண்டு, இரண்டுபேருமாய் என்னை இல்லாத பேச்செல்லாம் பேசுறான்கள்." என்று சொன்னாள். கிழவியின் குரலைக்கேட்ட சின்னத்தம்பியென்பவன் உடனே அங்குச் சென்றான். அவனைக்கண்டதும் பரம் நடுக்கமுற்று, "அண்ணே! என்னை ஒன்றுஞ் செய்யாதே, நாங்கள் வந்த நியாயத்தை உனக்கறிவிக்கின்றோம், உன்னாணையண்ணே! பாட்டியுலகநடையிற் தேர்ந்தவளல்லபடியால், சாகரனின் சொற்படி அவ்விடம் ஒரு விஷத்தைப்பற்றிச் சம்பாஷிப்பதற்காக இங்கு வந்தேன். வந்தவுடன் நித்திரையாயிருந்த பாட்டியைச் சாகரன் எழுப்பவே, பாட்டி கோபங்கொண்டு எங்களிருவரையும் வைதாள் அண்ணே! இதுதான் நடந்த விஷயம்" எனப் புகன்றான்.

சின்னத்தம்பி: தம்பி அதில் யாதொரு குற்றமுமில்லை; கிழவிகள் இருக்கும் வீடெல்லாம் எப்போதுமிப்படித்தான்.

பரம்: ஆம் அண்ணே; அன்னையும் பிதாவும் பின்னடிக்கிடைஞ்சல்.

சின்னத்தம்பி: ஐயோ! தம்பி அப்படியல்ல,...............

இதைக்கேட்ட கிழவி சின்னத்தம்பியின் மேல் வெடுக்கெனப்பாய்ந்து "அடே, சண்டாளா! நீ பாலுக்குக் காவல் பூனைக்குத் தோழன் போல் காண்கிறாயே," எனச் சினந்து பேசினாள்.

சின்னத்தம்பி: எணை சும்மா அலட்டாமற் கிட.

பரம்: அண்ணே! பார்த்தீர்களா? நீங்களோர் சுற்றத்தவனாய் இருந்தும் உங்களை இவ்வாறாக வைதால் சுற்றத்தவனல்லாத என்னை எவ்வளவாகப்பேசும் இக்கிழவியென் சிந்தியுங்கள்.

சின்னத்தம்பி: தம்பி நீர் பேரம். என்ன விஷயத்தைப் பற்றிக் கிழவியிடம் சம்பாஷிக்க வந்தீர்?

பரம்: ஆலமஞ்சென்றதானு வணக்கவேண்டுமென்பதைப் பற்றி அறிவதற்காகவே வந்தேன்.

சின்னத்தம்பி: தம்பி! கிழவிக்கு கிட்டத்தட்ட வயதும் 95 ஆகின்றது. இனி உங்களைப் போன்ற தற்காலப்பிள்ளைகளுக்குக் கிழவி பேசுவதொன்றுமே விளங்காது ஏனெனில் கிழவிக்குப் பற்களோ ஒன்றுமில்லை. எப்போதும் நடுக்கமும் சினமுமே அவளிடம் குடிகொண்டிருக்கின்றது. ஆனதால் தம்பி! இவ்விஷயத்தை யாரேனும் அறிஞர்களிடம் தெரிந்து கொள்ளுங்கள்.

பரம்: மிகவும் நல்லது அண்ணே! சாகரனை நான் தேடுவதாக அறிவிப்பீர்களா?

சின்னத்தம்பி: அதற்கென்ன தம்பி சாகரா! சாகரா!!

சாகரன் அப்போதுதான் பாட்டியின் கட்டிலின் கீழ் ஒளித்திருந்து எழுந்துவந்தான். வரும்போது "என் அப்பா" என்று சத்தமிட்டான்,

சின்னத்தம்பி: இங்கே வா. உன்னுடைய நண்பன் தேடுகிறார்.

பரம்: சாகரா! நம் நண்பர் எங்களை எதிர்பார்த்திருப்பாரல்லவா? சீக்கிரம் வா.

சாகரன்: இதோ வந்தேன்.

சாகரன் வீட்டினுட் சென்று தகப்பனிடம் விடை பெற்றுக்கொண்டு மீண்டும் பரம் அண்டை வந்தான்.

நண்பர்களிருவரும் ஜீவமிருக்குமிடத்தை நோக்கிச் சென்றனர். அவ்விடத்தையடைந்ததும மூன்று மித்திரர்களும் ஒருங்கு கூடினர்.

பரம்: ஜீவம்! நாம் மூவரும் சம்பாஷிக்கவேண்டிய கருமத்தை உற்று நோக்குகையில் நீர் எம்மினுந் தமிழில் வல்லோனாகையால், உம்முடன் சம்பாஷிப்பது தகுதியன்று. ஆதலால் அதை மெல்ல விட்டுவிடுவோம்.

ஜீவம்: நீங்களிருவரும் எதற்குச் சம்மதிக்கிறீர்களோ நானுமப்படியே.

சாகரன். ஆம்; ஆம்; அது மிகவும் நல்லது. நானுமதற்குச் சம்மதந்தான்.

அவர்களிருவரும் இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டிருக்கப் பொழுதும் அஸ்தமித்தது. பட்சிகளும் பல திசைகளில் ஒடுங்கின. வேலையாளர்களும், தத்தம் வீட்டை நோக்கினர். தெருக்களில் மின்சார விளக்குகள் மிளிர்ந்தன. நண்பர்களும் தத்தம் இல்லங்களையடைந்தார்கள். —தொடரும்

குருநாக்கல் சைவமகா சபை

ஆரும் வருட நிறைவு விழா

நிகழும் தாதுவ வருடம் ஆனி மீ 1ந் திகதி (14-6-36) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மேற்படி சபையின் ஆரும் வருட நிறைவு விழா சபை மண்டபத்தில் பக்கவாத்திய சகிதமாகத் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாகியது.

அத்தருணம் குருநாக்கலை யடுத்த பல பட்டணங்களிலிருந்து அநேக சிவநேயச் செல்வர்கள் சமூகமளித்துச் சபையைச் சிறப்பித்தனர் திரு. அ. கனகசபாபதி யவர்கள் அக்கிராசனம் வகித்தனர்.

சென்ற வருட அறிக்கையும் வரவு செலவுக் கணக்கும் முறையே காரியதரிசியாலும் தனாதிகாரியாலும் வாசிக்கப்பெற்ற பின் அடுத்த வருடக் காரிய கர்த்தாக்களாகப் பின் வருபவர் தெரிவு செய்யப்பட்டனர்.

அக்கிராசனர் திரு. கி. கந்தையா (Proctor) உபஅக்கிராசனர்கள் திரு அ. கனகசபாபதி, திரு. த. க. மயில்வாகனம் இணைக் காரியதரிசிகள் திரு. இ. தாமோதரம்பிள்ளை, திரு. வ. சதாசிவம் இணைத் தனாதிகாரிகள் திரு. சு. சண்முகசாமி, திரு. ச. அ. முருகேசு நிருவாகசபை (மேலே சொல்லப்பட்டவர்களுடன்) திரு. இ. சபாபதி, திரு, சோ. முருகேசம்பிள்ளை, திரு. வே. ஆழ்வாப்பிள்ளை, திரு. வீ. வயிரமுத்து, திரு. வ. கனகசபை, திரு. பெ. சின்னத்தம்பி திரு பெ. குமாரசாமி, திரு. சி. சின்னையா. கணக்குப்பரிசோதகர்கள் திரு. அ. சிவசாமி, திரு. பெ. சோமசுந்தரம்.

பின்னர் இணைக்காரியதரிசிகளிலொருவரான தி. வ. சதாசிவம் சென்ற வருடம் இச்சபைக்கு ஆதரவு புரிந்த கர்மகர்த்தாக்களுக்குச் சபையின் சார்பாக நன்றி கூறி அடுத்த வருடச் செயலாளர்களையுஞ் சைவநெறி தழைத்தோங்கும் வண்ணமாகத் தத்தம கடமைகளைப் புரியும்படி வேண்டிக்கொண்டனர்.

சம்பவங்களிவ்வகை நடந்துகொண்டிருக்கையில் கதிர்காமத் திருத்தொண்டிற் றற்போது ஈடுபட்டிருக்கும் பிரம்ம ஸ்ரீ சச்சிதானந்த இராசயோகிகள காத்திராப்பிரகாரமாக அத்தருணம் விஜயஞ்செய்து சபையை ஆசீர்வதித்துச் சில தேவாரப் பாக்கள் பக்கவாத்திய சகிதமாய்ப் பாடி சைவ சித்தாந்தத்தின் நுண்ணிய கருத்தமைந்த போதனைகள் செய்தனர்.

பின்பு பண்டிதர் திரு. நா. முருகேசம்பிள்ளை அவர்கள் "எப்பொருள் மெய்ப்பொருள்" என்னும் விஷயத்தைப்பற்றியோர் அரிய உபந்நியாசஞ் செய்தார்.

இத்துடன் நிறைவுவிழா சுமார் இரவு 9மணியளவில் தேவாரபாராயணத்துடன் இனிது முடிவெய்தியது.

—கடிக

சர்வதேச சங்கக்கூட்ட விருந்தில் அபிஸீனிய சக்கரவர்த்தி

அபிஸீனியர் இத்தலியருக்கு அடங்கவில்லை

"இன்னமும் எனக்கு நம்பிக்கையுண்டு"

11-6-36

லண்டன் நகரில் அபிஸீனிய சக்கரவர்த்தி, தமது முடிக்குரிய மகன், ராசகுமாரி பெண்ணும் இவர்களுடன் சர்வதேச சங்கக்கூட்ட விருந்துண்டபோது பின்வருமாறு பேசினார்;—

"பகைவர் பிடித்த மாகாணங்களில் வசிக்கும் அபிஸீனியர்கள் அப் பகைவருக்குக்கீழ்ப்படிதலின்றிக் கலகஞ் செய்கிறார்கள். அபிஸீனியாவின் மூன்றிலொருபாகமாகிய மேற்குப் பகுதி இப்பொழுதும் பழைய சுதேச தேசாதிபதிகளினாலேயே பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. சர்வதேசசங்கத்தின் உதவியைக்கொண்டு நீதியான வழியில் முயற்சி செய்து எனது சுயாதிபத்தியத்தை நான் மீளப் பெறவேண்டுமென்பது எனது நம்பிக்கை."

அடிஸபாபா டியூக் பட்டவர்த்தனர்.

இத்தலிய பிரதம சேனாபதியாகிய மார்ஷல் படக்கிளியோ அடிஸபாபா நகர் டியூக் பட்டவர்த்தனராக்கப்பட்டார்.

விவாகம்

சந்திரசேகரம்—சின்னம்மா

சென்ற வைகாசிமீ 24-ந் திகதி (6-6-36) சனிக்கிழமை இரவு இந்துசாதனக் காரியாலயத்தில் கம்பஸிட்டராகவேலைபார்க்கும் நுணாவிலைச் சேர்ந்த திரு. சி சந்திரசேகரத்திற்கும் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த ஸ்ரீமதி V. சின்னத்தம்பி சின்னம்மாவிற்கும் மணமகளில்லத்தில் விவாகம் இனிது நடந்தேறியது. தம்பதிகள் சகல பேறுகளும் பெற்று வாழ இறைவன் அருள் பாலிப்பாராக.

வெற்றிலைத் திருட்டு வழக்கு.

திருடன் வெற்றிலையும் கையுமாக அகப்பட்டானும்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட் நீதிபதி திரு. சி. குமாரசாமி முகசாவில் மாவிட்டபுரத்தில் வசிக்கும் கந்தப் பிள்ளை சின்னத்தம்பி என்பவன் அவ்வூர் வைரவி சின்னத்தம்பி என்பவருடைய வெற்றிலைத் தோட்டத்தில் களவாகச் சென்று சென்ற மாசி மாதம் 19 ம் திகதி இரவு 3-30 அல்லது 4 மணியளவில் வெற்றிலை ஆய்ந்து அவற்றைத் தெல்லிப்பழை றெயில் ஸ்டேசனில் கொண்டுபோய் வைத்திருந்தபோது ஆளையும் பொருளையும் கண்டு பிடித்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடர்ந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு எஸ். கனகசபையும் எதிரி சார்பாக நியாய துரந்தரர் ஆர். சுப்பிரமணியமும் வாதித்தனர்.

விசாரணையின்போது வழக்காளியாகிய வைரவி சின்னத்தம்பி கூறியதாவது:—

எனக்கு வயது 70 நான் தோட்ட வேலை செய்கிறவன். நான் மாவிட்டபுரத்தில் வசிக்கின்றவன்; எனக்கு வெற்றிலைத்தோட்டமொன்றுண்டு இத் தோட்டத்துக்குக்கிட்டத்தான் நான் குடியிருக்கும் வீடும் இருக்கிறது. சென்ற மாசி மாதம் 19 ம் திகதி இரவு நான் எனது தோட்டத்தைப் பார்க்க இருமுறை சென்றேன். சென்றபோது கையில் அரிக்கன் லாம்பு ஒன்றைக் கொண்டு சென்றேன். எனது தோட்டத்துக்குப் பக்கத்தே இருக்கிற சுப்பிரமணியத்தின் தோட்டத்தில் இது சம்பவத்துக்கு மூன்று நாட்களுக்குமுன் வெற்றிலை திருட்டுப் போனதை அறிந்தமையாலேயே நானும் இருமுறை என் தோட்டத்திற்குச் சென்றேன். இச் சுப்பிரமணியத்தின் தோட்டத்தின் ஓர் பகுதியில் தான் நான் வெற்றிலை நாட்டி இருக்கிறேன். சுப்பிரமணியத்தின் தோட்டத்தில் வெற்றிலைக் களவு போனபோது நான் திருடனைக் கண்டுதாக்கினேன். எதிரியே அத் திருடனாகும். இது சம்பவத்தன்று இரவு இரண்டாம் முறை நான் தோட்டத்தைப் போய்ப் பார்த்தபோது யாரோ களவாக வெற்றிலை ஆய்ந்து கொண்டு போய் இருப்பதைக் கண்டேன். இதைப் பார்த்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்தபோது வழியிலுள்ள ஓர் கிணற்றடியில் தண்ணீர் இறைக்கிறதற்காக (1) ஆறுமுகம் (2) வல்லிபுரம் (3) வேலுப்பிள்ளை ஆகியவர்கள் வந்து நின்றதைக் கண்டேன். இவர்களுக்கு இச் சம்பவத்தை நான் தெரிவித்தேன். தெரிவித்ததும் ஆறுமுகம் எங்களைப் பார்த்து "இக் கள்வனைப் பிடிக்க வேண்டும்" ஆகையால் வாருங்கள் போவோமென்று சொல்லிக்கொண்டு நாங்கள் நால்வருமாகத் தேடத் தொடங்கினோம். தேடிக்கொண்டு தெல்லிப்பழை ஸ்டேசனுக்குச் சென்றோம். எங்களிடத்தில் ஒரு அரிக்கன் லாம்பும் ஒரு டோச் வெளிச்சமுமிருந்தன. றெயில்வே ஸ்டேசனில் எதிரி வெற்றிலைக் கட்டை ஓர் வாங்கின் மேல் வைத்து விட்டு நிலத்தில் (வெற்றிலைக் கட்டுக்குப் பக்கத்தே) படுத்திருக்கக் கண்டோம். எங்களில் ஒருவர் எதிரியைப் பிடித்து விசாரித்தபோது எதிரி தான் இனிமேல் அப்படிச் செய்ய மாட்டேன் என்றும் தன்னை விட்டு விடும்படியும் வேண்டிக் கொண்டார். நாங்கள் "உன்னை விதானையிடம் ஒப்புவிக்கிறோம்" என்று சொல்லி விதானை வீட்டுக்கு அழைத்துச் சென்றோம்.

நாங்கள் எதிரியையும் வெற்றிலையையும் விதானையிடம் ஒப்புக் கொடுத்தோம். விதானையார் எங்களுடன் தோட்டம் பார்க்க வந்தார். இதன் பிற்பாடு எல்லாருமாக மணியகாரன் வீட்டுக்குச் சென்றோம். அங்கிருந்து யாழ்ப்பாணம் கோட்டில் வந்து வழக்குத் தொடர்ந்தோம். வெற்றிலையின் பெறுமதி ரூபா 3. வழக்குத் தொடர்ந்த பின் கோட்டார் வெற்றிலையை எடுத்துப் போகும்படி எனக்கும் கட்டளை இட்டார்கள்.

இதன் பிற்பாடு (1) ஆறுமுகம் (2) வல்லிபுரம் ஆகியவர்களை விசாரணை செய்த பின் எதிரியாகிய கந்தப்பிள்ளை சின்னத்தம்பி விசாரித்தபோது அவர் கூறியதாவது:—

நான் ஓர் வியாபாரி; நான் இத் திருட்டைச் செய்யவில்லை. இதற்கு முன்னும் என்மீது ஒரு வழக்குத் தொடரப்பட்டது, அந்த வழக்கில் நான் மறியலுக்குப் போனேன். நான் இவ் வழக்காளிகளை எனது வளவுக்குள்ளால் போகவிடாமல் மறித்தேன். இவ் வெற்றிலைக்கட்டை இவர்களே கொண்டு வந்து வைத்து விட்டு என்னைக் கள்ளனெனப் பிடித்தார்கள். நான் கொக்குவிலில் இருக்கும் சோடாக் கொம்பனிக்குப் போகிறதற்காகவே றெயிலடிக்குப் போனேன். என்னை ஆறுமுகமே பிடித்தார்.

அப்போது நான் கொக்குவிலுக்குப் போக வந்திருக்கிறேன். என்னை ஏன் பிடிக்கிறீர்கள் என்று சொன்னேன். அவர்கள் என்னை விதானை வீட்டுக்குப் போகும்போது தான் வழக்காளி சின்னத்தம்பியைத் தோட்டத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்தார்கள். றெயிலடிக்குச் சின்னத் தம்பி வரவில்லை. நான் வழக்காளியின் தோட்டத்துக்குப் போகவில்லை என்று சத்தியஞ் செய்வேன். விசாரணையின்பின் எதிரியைக் குற்றவாளியெனத் தெரிவித்தபோது முடிக்குரிய நியாயவாதி எதிரி முன்னும் ஐந்து முறை குற்றவாளியெனக் காணப்பட்டவன் என்று கூறினார். எதிரிக்கு ஆறுமாதக் கடுங்காவல் மறியலும் இரண்டு வருஷப் போலீஸ் மேற்பார்வையும் விதிக்கப்பட்டன.

பரிதாபமான மரணங்கள்!

தாயும் பிள்ளைகளிருவரும் மாண்டனர்

3 பிள்ளைகள் ஊறடைந்தனர்

சென்ற வெள்ளிக்கிழமை (12 6-36) இரவு முகத்துவாரத்திலுள்ள ஒரு வீட்டில் வெடித்திருந்த சுவர் பெயர்ந்து விழுந்தமையினால் ஒரு தாயும் இரு பிள்ளைகளும் மாண்டுபோக மூன்று பிள்ளைகள் ஊறடைந்தனர். முகத்துவாரத்தில் வசிக்கும் மிஸ்டர் W. E. வின்சேர்ட் என்பவர் கொழும்பிலுள்ள வியாபார சமுதாயமொன்றில் கிளார்க்காகக் கடமை பார்ப்பவர்; இவருக்கு ஒன்பது பிள்ளைகள். இவர் குத்தகைக்கு எடுத்திருந்த வீட்டின் ஒரு சுவரிலே பெரிய வெடிப்பு இருந்தது. அந்த வெடிப்பினால் யாதும் அபாயம் நேரக்கூடுமென்றும் அதனைப் பழுது பார்த்துவிடல் வேண்டுமென்றும் பலமுறை அவ்வீட்டின் சொந்தக்காரனுக்குச் சொல்லிவந்தார்; அவனும் தவணையிட்டுவந்தான். குறித்த இரவன்று தகப்பனும் 4 பிள்ளைகளும் ஒரு அறையிலும் 5 பிள்ளைகளும் இன்னொரு அறையிலுமாகப் படுத்து உறங்கினார்கள் நடுச்சாமத்திலே குறித்த அந்தச் சுவர் பெயர்ந்து இடிந்து விழவே 5 பிள்ளைகளுந் தாயும் அதற்குள் அகப்பட்டுக்கொண்டனர். தாயும் இரண்டு பிள்ளைகளும் உயிர் நீக்க மூன்று பிள்ளைகள் சிறு ஊறுடனே தப்பிக்கொண்டனர் இறந்த பிள்ளைகளிருவரும் ஆண்கள். ஒன்றின் வயசு 12 மற்றையதின் வயசு 7. அந்தோ! மனைவியையும் மக்களையும் ஏக காலத்திற் பறிகொடுத்த அந்த மனுஷனுடைய மனம் என்ன பாடுபடும்?

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸலி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதப் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக் பஸ்பம், பவளபஸ்பம, வெள்ளிபஸ்பம், அபகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை,பித்த பாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயுஇன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து. கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்,

சிங்கப்பூர்பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பீ. சட்டம் இல்லாததனால் முன் மணிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
வெகுரான ஆரோக்கிய சுகாதார
வைத்தியசாலை,
காத்தான்குடி. போஸ்று,
மட்டக்களப்பு.
Y46 1-1-36 to 31-12-36) சிலோன்,

திருநெல்வேலி ஒற்றுமை
(வரையுளது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 50
ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரு
% 5ம் ஆதாயமும்பெறலாம்
தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால்,
முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
பெந்தமாயும்,சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.
வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.
(Y. 189. 1 11-35 to 31-10 36.) வி.

N.வைத்திலிங்கம்
& கம்பெனி
பெரியகடைத்தெரு,யாழ்ப்பாணம்.
கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில்செய்யப்பட்டஉத்தரவாதமுள்ள
சீமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.
கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.
HEAD OFFICE:
38, 3rd Cross Street, Telephone No. 30.
Colombo
(Y. 47. 8-2 36—7-2-37) வி

லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்.
எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்
பாரதநாட்டின்
முதன்மையானதும் சிறந்ததுமான
திவ்விய ஔஷதம்.
மிருகக் கொழுப்பு
கலக்கப்படவில்லை என்பதற்கு
உத்தரவாதம்.
Y 44. 1-1—31-12-36)

இந்தியன் வங்கி
லிமிற்றெட்
ஸ்தாபிதம் 1907] [வரையறுக்கப்பட்டது.
தலைமை ஆபீஸ்
சென்னை (மெட்ராஸ்)
யாழ்ப்பாணக்
கிளை ஆபீஸ்
(பெரிய கடை)

பொன் நகை, தான்யவகை இவைகளின் ஈட்டில் சகாயமான வட்டிக்குக் கடன் கொடுக்கப்படும். எல்லாவகையான பணக் கொடுக்கல் வாங்கல் விஷயங்களும் இங்கே செய்து கொள்ளலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை யாழ்ப்பாணம் மானேஜரிடம் அறிந்து கொள்ளலாம். வி
Q 290. 9-3 to 8-6-36

வெள்ளவத்தை மில்லில் செய்யப்படும் இலங்கா உற்பத்திச் சீலைகளையே வாங்குங்கள்!

அதனால், எப்போதும், மிகச் சிறந்ததும் மிக மலிவானதும் ஆகிய சீலைகளையும் உங்கள் வீட்டுத் தேவைகளுக்கு வேண்டிய எவ்வகைத் துணிகளையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் என்பதை முற்றும் நம்புங்கள்

இலங்கையின் நாலுபக்கங்களிலும் நம்மிடம் வாடிக்கையாகப் புடவைகளை வாங்குவோர் பல்லாயிரக்கணக்கானோர் உளர்.

நமது புடவைகள் திறமானவையும் மலிவானவையும் என்பதற்கு அவை ஏராளமாக அழிவதே தக்க சான்றாகின்றது.

1936-ம் ஆண்டில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் என்னும் நான்கு மாதங்களிலும் பின்வருமாறு நமது புடவைகள் விற்பட்டிருக்கின்றன:—

வேட்டிகளும் சால்வைகளும்	சேலைகள்	டுவீல் துணிகள்	பெட்ஷீட்டுகள்
1,95,467பீசுகள்; லாங்குளோத்ஸ் 62,777 யார்	1,9880 பீசுகள்; சேர்ட்டுகள் 1,10,931 யார்	68,486 பீசுகள்; ஷீட்டுகள் 7,746 யார்	37,128 பீசுகள்; வேறுவகைத் துணிகள் 12,00,000 யார்

நம்மிடம் வாடிக்கையாகத் துணிகளை வாங்கி நம்மை ஆதரித்தவர்களுக்கு நாம் நன்றி செலுத்துவதோடு, இன்னும் அவர்கள் அவ்வாறே ஆதரிப்பார்களெனவும் நம்புகின்றோம்.

சேலைகள்

பலவிதமானநிறங்களோடு கூடிய தூய வெண்ணிறச்சேலைகள் விலைகள் தனித்தனி ரூபா 1-75 லிருந்து ரூ. 2-65வரை யாருக்குத்தக்கபடி

பல்வேறு நிறங்களில் அழியாத சாயமுள்ள சேலைகள் விலைகள் தனித்தனி ரூபா 2 லிருந்து ரூபா 2-90 வரை. யாருக்குத்தக்கபடி

பல்வேறுநிறங்களில், பட்டுக்கரைகளையுடைய சேலைகள் விலைகள் தனித்தனி ரூபா 1-50 லிருந்து ரூ. 2-50 வரை. யாருக்குத்தக்கபடி

பல்வேற தினுசுகளில் பட்டுக்கரைச் சேலைகள் விலைகள் தனித்தனி ரூபா 2-10 லிருந்து ரூ. 4-25வரை. யாருக்குத் தக்கபடி

வேட்டிகள்

பட்டுக்கரை பிளீச்வேட்டி 50× 3½யார் தனித்தனி ரூ 1-45
„ „ 50× 4 யார் தனித்தனி ரூ. 1-55
ஷை வேட்டிகளுக்குப் பொருத்தமானபட்டுக்கரைச் சால்வைகள் 40×2½யார் தனித்தனி80சதவீதம்
பான்ஸிபிளீச்வேட்டிகள் 40×3½யார் தனித்தனி ரூ.1-10 வீ
„ „ „ 46× 4யார் தனித்தனி ரூ 1-20வீதம்
அவற்றிற்குப் பொருத்தமான பான்ஸி சால்வைகள் 40× 2½யார் தனித்தனி 70 சதவீதம்

சாரங்கள்

அழகான குறிகளோடு கூடிய புதுத்தினுசுச் சாரங்கள் தனித்தனி 50 சதத்திலிருந்து ரூபா 1-50வரை

கம்பாயங்கள்

குறிகளுள்ள தினுசுகள் 40 சதத்திலிருந்து ரூபா 250 வரை

கிரேத் துணிகள்

முரட்டுப்பாவிப்புக்குச் சிறந்தவை; உடைக்குத் திருப்திகரமானவை×; எளிதில் வெள்ளையாகக் கூடியவை; விலைகள் யார் ஒன்றுக்கு 18 சதத்திலிருந்து 50 சதம் வரை.

லோங்குளோத்ஸ்

வீட்டுப்பாவிப்புக்குள்ள ஒவ்வொரு தேவைக்கும் விலைகள் யார் ஒன்றுக்கு 20 சதத்திலிருந்து 50 சதம் வரை

பிளீச் பண்ணாத பெட் ஷீட்டுகள்

54, ×80,	சோடி ஒன்றுக்கு	ரூ. 2-25
72, ×80,	„ „	ரூ. 3-10

பிளீச் பண்ணிய பெட் ஷீட்டுகள்

54, ×80	சோடி ஒன்றுக்கு	ரூபா 3-00
72, ×90	„ „	ரூபா 4-00

சில்லறைவியாபாரக்கடை, பெரியகடை, யாழ்ப்பாணம்

தி சிலோன் ஸ்பின்னிங் அன் வீவிங் கம்பெனி லிமிடெட்டின்
முதலாவது மோர்ட்கேஜ்டிபெஞ்சர்கள் வைத்திருப்போருக்கு டிரஸ்டிகள்

Nethrananda Thailaya

Ceylon's Premier Curative Medicine Oil.

நேத்திரானந்த தைலம்.

இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50.
தபாற்கூலி 45 சதம்.

இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிவந்திருக்கும் ஏனைய போலித்தைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

பனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

இந்த நேத்திரானந்த தைலமே.

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று ஊர்ந்துதிரிகிற ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினுல் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தானம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னாண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணதுறை.
கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காஸில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணதுறை.
(H 332, 20-3-36 to 19-9-36)

கண்ணே பிரதானம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில் பிறவுண்றேட் (நரியன் குண்டு) ரத்தினவாசத்தில் அமைக்கப்பெற்ற அமிர்தானந்த வைத்தியசாலையில் இப்போது நேத்திரத்திற்குரிய சிகிச்சைக்கு வேண்டப்படும் ஔஷதங்கள் கருவிகளும் சேர்க்கப்பட்டிருத்தலால் வேண்டியவர்கள் காலை 7 மணி முதல் 10 மணி வரை வசதியாக ஆலோசனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். மற்றைய நோய்களுக்கு வேண்டிய சிகிச்சை முன்போல் நடைபெறும்.

வைத்தியசாலை
சொந்தக்காரர்
த இராமலிங்கம்
வைத்தியர்

Address:—
Manager
Amirdananda Vaidyasalai
"Ratna Vasa" Brown Road
Vannarponnai
Jaffna (Ceylon)
Y2 6· 7-5-36 to 30-4-37 (வி)

விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

1 பந்தி	(கலம்)	ரூபா 10-00
½ „	„	„ 5-50
¼ „	„	„ 3-00
1 அங்குலம்		„ 1-00

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை

ஆரோக்கிய லேகியம்.

சிறந்த மலசுத்தி ஔஷதம்.

மலபந்தமே உங்களின் ஆரோக்கியத்துக்கு இடையூறாகும். ஆரோக்கிய லேகியம் சாப்பிடுவதால் தினசரி கிரமமாய் மலம்சுழியும்; சோம்பல் நீங்கும்; தினசரி அலுவல்களுக்கு உற்சாகம் உண்டாகும்.

இன்னும் நித்திரை ஸ்கலிதம், நீருடன் ஸ்கலிதமாதல், உடம்பு இளைத்து வருதல், கை காலசதி, குடைச்சல், நீக்கும். பத்தியமில்லை.

20 ரூபா எடை டின் விலை ரூ. 2-00 தபால்செலவு சதம் 75.

நீரழிவுக்கு.

அப்ரேக் செந்தூரம் கைகண்ட மருந்து.

பரீக்ஷை:—ஒரு மண் கலசத்தில் ஊசி நுழையும்படியான சிறிய துவாரங்கள் போட்டு அதில் ஜலம் விட்டு ஒழுகும்போது நமது அப்ரேக் செந்தூரம் ஒரு சிட்டிகை தூவிப் போட்டால் ஒழுகும் ஜலம் உடனே அடைபட்டுவிடும். அதேபோல் நீரழிவில் அளவுமீறி ஓடும் நீரைக் குறைத்து நீரில் சர்க்கரை இருப்பது, தாகம் வரட்சி இவைகளைக் குணமாக்கும்.

20 நாள் மருந்து விலை ரூபா 12.50 சதம்.
ஸ்பெஷல் அனுபானம் சதாவாரி லேகியம் ரூபா 4-00.

தங்கபஸ்பம்.

தாதுபுஷ்டிக்கு ஓர் வரப்பிரசாதம்.

மெலிந்த தேகத்தைப் போஷித்து சரீரத்தில் புதியரத்தத்தை ஊறச்செய்து அளவற்ற பலம், ஆண்மை வீரிய விர்த்தி உண்டாக்கும். பத்தியமில்லை. (விபரமான கேட்லாக் இனாம்.)

30 வேளை தங்கபஸ்பம் ரூபா 10. அனுபானம் லேகியம் ரூபா 2-50.

கௌனகட்டார் ஆர்டருடன் முன்பணமனுப்பவேண்டும்.

தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

Q 19. 27-4 to 26 7-36 வி (Palni S. I.)

படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்
நடுவன்மை நாணுபவர்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna on Thursday, June 18th 1936.